பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 22 சனிக்கிழமை (04.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:129

# பாதுகாப்புச் சபையில் இலங்கை நிலைமை

# உத்தியோகபூர்வமாக ஆராயப்படும்

## புதிய தலைவர் நம்பிக்கை தெரிவிக்கிறார்



கொழும்பு, ஏப்ரல்4

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் இலங்கை நிலைமை குறித்து உத்தியோகபூர்வமாக ஆராயப்படும் என அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள மெக்ஸிகோ நம்பிக்கைத் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புச் சபையின் இம்மாதத்திற்கான தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மெக்ஸிக்கோ தூதர் கிலௌடே ஹெலர் 'இன்னர் சிற்றி பிறெஸ்' செய்திச் சேவைக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளனில் இருந்து 480 பேர் புல்மோட்டை தள வைத்தியசாலைக்கு

கொழும்பு,ஏப்.4

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பிரதேசத்தில் இருந்து காயமுற்றவர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் 480 பேர் 'கிரீன் ஓஸன்' கப்பல் மூலம் நேற்றுப் புல்மோட்டைக்கு அழைத்துச்செல்லப்பட்டதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்

(16 ஆம் பக்கம் பார்க்க)

சண்டையிடும் இரண்டு தரப்புக்களும்

## உடனடியான போர் இடைவெளிக்கு இணங்காவிடில் வன்னியில் பெரும் மனிதாபிமான நெருக்கடி உருவாகும்!

### பிரிட்டிஷ் அமைச்சர் மைக் போஸ்டர் அபாய அறிவிப்பு



லண்டன், ஏப்.4

இலங்கையின் வடக்கில் (வன்னியில்) மிக வேகமாகச் சுருங்கிவரும் போர் வலயத்தில் சிக்குண்ட மக்கள் வெளியே தப்பிச் செல்வதற்கு வசதியாக உடனடியாக போர் இடைவெளி ஒன்றுக்குப் போரிடும் இரண்டு பகுதியினரும் இணங்காவிடில் அங்கு மிகப்பெரும் மனிதாபிமான நெருக்கடி - ஆபத்து - தோன்றும் அபாயம் உண்டு.

இவ்வாறு பிரிட்டனின் சர்வதேச அபி

(16 ஆம் பக்கம் பார்க்க).

## கருணாநிதிக்கு புலிகள் கொலை அச்சுறுத்தலாம்

சென்னை,ஏப்.4

விடுதலைப் புலிகள் எனத் தெரிவித்து தமிழக முதலமைச்சர் கலைஞ[illegible]ு.கருணாநிதிக்கு கொலை அச்சுறுத்[illegible]க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் [illegible] தெரிவித்தனர்.

தடைசெய்யப்பட்ட விடுலைப் [illegible]களின் சின்னம் பொறிக்கப்பட்ட கடிதத் தலைப்புடன் கொலை அச்சுறுத்தல் கடி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு கிழக்கில் உள்ள விடுதலைப்புலிகளை ஆயுதங்களைக் கைவிட்டு சரணடையக் காலக்கெடு

கொழும்பு, ஏப்.4

புதுக்குடியிருப்பு கிழக்கில் இரண்டு சதுர கிலோ மீற்றர் சதுர நிலப்பரப்புக்குள் அடைபட்டுள்ள புலிகள் இன்று சனிக்கிழமைக்குள் ஆயுதங்களைக் கைவிட்டு உடனடியாகச் சரணடைய வேண்டும். அதற்கான இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்புக்கு வடக்கே அனாலங்குளத்தில் கடும் மோதல்

கொழும்பு, ஏப்.4

புதுக்குடியிருப்புக்கு வடக்கே அனாலங்குளம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது என படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

புதுக்குடியிருப்புக்கு வடக்கில் இரண்டு இடங்களில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடை யில் நேற்று

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அபுதாபியிலிருந்து திரும்பிய யாழ். இளைஞர் அறுவர் கைதாகி விடுதலை

கொழும்பு, ஏப்.4

அபுதாபியிலிருந்து நாடு திரும்பிய ஆறு வடபகுதி வாலிபர்களை சந்தேகத்தின் பேரில் கட்டுநாயக்க விமான நிலை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஹோம்ஸ் – பத்மநாதன் தொலைபேசிக் கலந்துரையாடலுக்கு அனுசரணை வழங்கிய நோர்வேயிடம் அதிருப்தி

### இலங்கை வெளிவிவகாரச் செயலர் வெளியிட்டார்

கொழும்பு, ஏப்.4

ஐ.நாவின் மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸுக்கும் விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளர் கே. பத்மநாதனுக்கும் (கேபிக்கும்) இடையில் தொலைபேசிக் கலந்துரையாடல் இடம்பெற அனுசரணை வழங்கியமைக்காக நோர்வேயிடம் இலங்கை தனது அதிருப்தியை தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள நோர்வேத் தூதுவர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 'சிரச' ஊடகவியலாளர் தாக்கப்பட்டார்

கொழும்பு,ஏப்.4

'சிரச' தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் ஒருவர் கிரிபத்கொடவில் வைத்து நேற்று இனந்தெரியாத ஆயுததாரிகளினால் தாக்கப்பட்டுள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## போரை நிறுத்தக் கோரி அமெரிக்காவில் ஹிலாரியின் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்

-வாஷிங்ரனிலிருந்து ரங்கன்-

வாஷிங்ரன், ஏப்.4

இலங்கையில் தொடரும் இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்தவும் போரை நிறுத்தவும் அமெரிக்கா தலையிட வேண்டும் என்று கோரி அமெரிக்க தலைநகரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரனின் அலுவலகம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு (அமெரிக்க நேரப்படி) ஆரம்பமாகி நான்கு மணி நேரம்நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் தொடரும்இனப்படு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்த வருடத்தின் பொருளாதார வளர்ச்சி 5 வீதத்தை விட குறைவாகவே இருக்கும்

### சர்வதேச நிதிநெருக்கடியே காரணம் என்கிறது மத்திய வங்கி

கொழும்பு,ஏப்.4

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இவ்வருடம் ஐந்து வீதத்திற்கும் குறைவானதாக காணப்படும் எனத் தெரிவித்துள்ள மத்திய வங்கி, சர்வதேச நிதி நெருக்கடியே இதற்குக் காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் தலைமை பொருளாதார நிபுணர் நந்தலால் வீரசிங்க ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)




மக்கள் மனம் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SALE மாபெரும் மலிவு விற்பனை SALE

01.04.2009 - .04.2009 வரை

வாடிக்கையாளரின் நலன்கருதி ஈஸ்டர், சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு எங்குமே இல்லாத மாபெரும் மலிவு விற்பனை

* அனைத்து ஆடைகளுக்கும் விசேட விலைக்கழிவு!
தைத்த ஆடைகளுக்கு அதி விசேட விலைக்கழிவு!
உடன்விஜயம் செய்யுங்கள்.



லைடன் புடைவை நிலையம்

இல. 410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். தொ.பே: 0212222381

சித்திரை வருடம் வரை ஞாயிறு விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்.


## மரண அறிவித்தல்

### திருமதி சிவசுப்பிரமணியக்குருக்கள் அன்னலட்சுமிஅம்மா



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியக்குருக்கள் அன்னலட்சுமிஅம்மா நேற்று (03.04.2009) வெள்ளிக்கிழமை நல்லூரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ ச.சிவசுப்பிரமணியக்குருக்கள் (முன்னாள் பிரதம குரு, கோணேஸ்வரர் ஆலயம், திருகோணமலை) அவர்களின் அன்பு மனைவியும் சிவசண்முகானந்தேஸ்வரசர்மா, சி.அமிர்தகுணவல்லி, அமரர் சிவகுகானந்தேஸ்வரசர்மா, ச.சுந்தரகுணநாயகி, சிவசரவணபவானந்தேஸ்வரசர்மா, சிவகாங்கேயசர்மா, சிவசபாதீஸ்வரசர்மா, சி.ஹம்சகலாம்பிகை, செ.கௌரிபதேஸ்வரி; ச.உமா மகேஸ்வரி, ம.ரோகிணேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான திருமதி சி.பத்மாவதி, பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள் மற்றும் சி.விஸ்வேஸ்வரி, காலஞ்சென்ற சி.சங்கரநாராயணஐயர் மற்றும் சி.பாலநாகேஸ்வரி, சி.கல்யாணி, சி.சியாமளாதேவி, காலஞ்சென்றவர்களான பிர்ம்மஸ்ரீ வி.சிவச்சாமிக்குருக்கள், இ.செந்தில்நாதசர்மா மற்றும் ந.சபேசசர்மா, பிரம்மஸ்ரீ மங்களேஸ்வரசர்மா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2009) சனிக்கிழமை ந.ப. 12 மணியளவில் 96, செட்டித் தெரு, நல்லூரில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

96, செட்டித் தெரு, நல்லூர்.
தகவல்: குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



மாவிட்டபுரம், வீமன்காமம் வடக்கு, காந்திஜி சனசமூக நிலைய நிறுவுனரும் பிரபல சமூக சேவையாளரும் மனித நேயருமான

### நாகலிங்கம் அம்பிகைபாகன்

02.04.2009 இல் மறைந்த செய்தி எம்மையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினர், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி வீமன்காமம் வடக்கு, இராஜ இராஜேஸ்வரி அம்பாள் பாதங்களைப் பணிகின்றோம்.

வீமன் காமம் வடக்கு மக்கள் சார்பாக
Dr.V.யோகேஸ்வரன்
குமாரசாமி வீதி, திருநெல்வேலி.

## விற்பனைக்கு

கறுப்பு நிற அல்சேஷியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
158/4, தாசன் பாம், கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலையாள் தேவை

தொலைத் தொடர்பு நிலையத்தில் பணிபுரிவதற்கு பெண்வேலையாள் தேவை. யாழ். மாநகர சபைப் பகுதிக்குள் வசிப்பவர்கள் மட்டும் சுய விவரங்களுடன் சனி, ஞாயிறு தினங்களில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:
TOP world (ரொப்வேல்ட்)
768, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொ.பே: 0212228605, 2228387

## மெய்வன்மைப் போட்டிகள் துரையப்பா ஸ்ரேடியத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் ஏற்பாட்டில் 'வடக்கின் வசந்தம்' விழாவின் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

மூன்று பிரிவுகளாக இடம்பெறும் இந்தப் போட்டிகளில் பங்குபற்ற, பதிவு செய்த சகல கழகங்களையும் சமுகமளிக்குமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

(1)

## இரசாயனவியல் நூல் வெளியீடு

கரவெட்டி, ஏப்.4

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் 'இரசாயனவியல்' நூல் வெளியீடு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் பிரதம விருந்தினராகவும், வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

ஆய்வுரையினை ஆசிரியர் கந்தையா சண்முகசுந்தரம் ஆற்றவுள்ளார்.

(204-70)

## சைக்கிள் உரிமம் வழங்கும் பணி

வடமராட்சி, ஏப்.4

பருத்தித்துறை பிரதேச சபையினால் இவ் வாண்டுக்கான சைக்கிள் உரிமத்தகடுகள் பருத்தித்துறைபிரதேச சபை தலைமை அலுவலகம், குடத்தனை அலுவலகம் ஆகியவற்றில்வைத்துபொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக பிரதேசசபைச் செயலாளர் ச.சந்திரயோகன் தெரிவித்துள்ளார்.

சைக்கிள் உரிமையாளர்கள் காலம் தவறாது உரிமத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(1-236)

## மரண அறிவித்தல்கள்

### கபிரியேல் சிறாப்பினம்மா



குளமங்கால், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் தற்போது வத்தளை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் சிறாப்பினம்மா நேற்று (03.04.2009) வெள்ளிக்கிழமை மல்லாகத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசேந்தி - நத்தாலீ தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற கபிரியேலின் அன்பு மனைவியும் அருளப்பு, பிலிப்பையா, மகிறேற், திரேசம்மா ஆகியோரின் சகோதரியும் சாந்தன் (பிரான்ஸ்), ஜொய்சி (பிரான்ஸ்), புஸ்பம் (கொழும்பு, வத்தளை), காலஞ்சென்ற மகேந்திரம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித சவேரியார் வீதி, குளமங்கால், மல்லாகம்.
தகவல்: அல்பிரேட் துரைநாயகம் (தனையன்) பெறாமகன்.

### ஆறுமுகம் தனபாலசிங்கம்



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமாகிய ஆறுமுகம் தனபாலசிங்கம் (பாலா) 02.04.2009 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் சின்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - குணேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெகதீஸ்வரியின் (லண்டன்) அன்புக் கணவரும் பிரவீனாவின் பாசமிகு தந்தையும் சிவயோகம் (சுவிஸ்), நமநாதன் (சுவிஸ்) கமலாதேவி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் லோகநாதன் (சுவிஸ்), கனகேஸ்வரி (சுவிஸ்), தேவராசா, சுந்தரராஜா (கிராம அலுவலர்), திருக்கேதீஸ்வரி (கொழும்பு), கமலேஸ்வரி (சுவிஸ்), சண்முகராசா (சண்ரவி - சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் வரதராசன் (கனடா), வித்தியானந்தன் (கனடா), வரதலிங்கம் (கனடா), விஜய குமாரி (சுவிஸ்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

69B.A, நர்ரிலேன், யாழ்ப்பாணம். T.P. 021 222 2170
தகவல்: மைத்துனர்மார்: செ.தேவராசா, நா.சுந்தரராஜா (கிராம அலுவலகர்).

### A.B.மரியாம்பிள்ளை (C.C)

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், யாழ்.மாநகரசபை)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பெனடிக்ற் மரியாம்பிள்ளை (02.04.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற புலோலியைச் சேர்ந்த மரியம்மாவின் (முத்து) அன்புக் கணவரும் காலஞ்சென்ற பிரான்சிஸ் சேவியரின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புச் சகோதரரும் ஜெயவதி, அன்ரன் ஜெயக்குமார் (கொழும்பு), ஜெயராணி (கொழும்பு), ஜெயநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும் அலெக்ஸ்சாண்டர், காலஞ்சென்ற ஜேசுதாசன், நிர்மலா (கொழும்பு), ஜோகரட்ணம் (கத்தோலிக்க அச்சகம்), ஆகியோரின் அன்பு மாமனாரும் றூபன், அனிஸ்ரா, றுக்மன், லக்ஸ்மன், ராஜன், ஜெனிற்றா, நிரோஜன், ஜான்சி, டெஸ்மன், சுகந்தன், சுபாசினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் (06.04.2009) திங்கட் கிழமை காலை 8.30 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 30, யுவானியார் கோவில் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இனி என் செய்வர் அவர்கள்....!

வன்னியில் போர் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள பொதுமக்கள் நாளாந்தம் உயிரிழக்கின்றனர். அவர்கள் மீது நாம் அதிக அளவில் அக்கறை கொண்டுள்ளோம். மக்களின் உயிரிழப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு அங்கு போர்நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்படுவது அவசியம்.

அவ்வாறு தெரிவித்திருக்கிறார், வலியுறுத்தி இருக்கிறார் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபாண்ட்.

*''பாதுகாப்பு வலயம்'' எனப் பிரகடனப் படுத்தப்பட்ட பகுதிகளில்கூட, அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். அப்பாவி மக்கள் கொல்லப்படுவதைத் தவிர்ப்பதற்குப் போர் நிறுத்தம் அவசியம்.*

*இப்போதைய ஆபத்தான இடத்தில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்படுவது அவசியம். சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் கீழ், எல்லாச் சந்தர்ப்பங்களிலும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்ற கடமைப்பாட்டை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மதித்து நடந்து கொள்ளவேண்டும்.*

*மனிதாபிமான அடிப்படையில் போர்நிறுத்தத்தைச் செய்து கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையை நாம் இப்போது மீண்டும் முன்வைக்கிறோம்.* - என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் தமது நாட்டு நாடாளுமன்றத்தில் (02.04.2009 இல்) வைத்து குரல் எழுப்பியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள்சபை, அமெரிக்கா, பிரிட்டன் என்பன மனிதாபிமான நடவடிக்கையாகப் போர்ப் பிரதேசத்தில் சிக்குண்டுள்ள பொதுமக்கள் வெளியேறுவதற்கு வசதியாக, போர் இடைவெளியை (Humanitarian Pause) சிலநாள்களுக்கேனும் மேற்கொள்ளுமாறு கேட்டிருந்தன. மனித உயிர்களை அநியாயச் சாவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற இரக்க சிந்தையின் காரணமாக மனிதத்தின் குரலாக வெளி வந்த ஆகக்குறைந்த அளவிலான கோரிக்கை அது.

ஆனால் அந்தக் கோரிக்கையை, இலங்கை அர சாங்கம் ''மனிதாபிமான ரீதியில்'' தாம் செயற்படுத்தத் தொடங்கிவிட்டாதாகப் பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல இம்மாதம் முதலாம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்துத் தெரிவித்திருந்தார்.

*மக்கள் இடம்பெயர்ந்து வருவதை அறிந்தால், முன்னரங்க நிலைகளில் வருவதைக் கண்டால், படையினர் உடனே ஒரு மணித்தியாலத்துக்கோ அல் லது இரண்டு மணித்தியாலங்களுக்கோ தாக்குதல் களை நிறுத்தி வைக்கின்றனர். போர் இடைவெளி விடப்படுகின்றது* - என்று அவர் ஐ.நா. மற்றும் அமெரிக்கா, பிரிட்டனைக் கிண்டலடிக்கும் பாணியில் கூறியிருந்தார்!

கோப்பையில் அல்லது கிண்ணத்தில் தராவிட்டாலும், ஒரு கவளம் சோறாவது தருமாறு கேட்டவனுக்கு நாலு அவிள்களைக் கிள்ளிப்போட்டது போன்ற தோரணையில் இலங்கை அரசு ''ஏய்க்காட்டி'' இருக் கிறது. அதனை விவாதப் பொருளாக்கி, நாங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தியிருக்கும் மக்கள் நலன்நாடிய செயற்பாட்டைத்தானே நீங்கள் கேட்கிறீர் கள் என்று ''பூமராங்காக'' சர்வதேசத்தின்மீது திருப்பி விட்டிருக் கிறது இலங்கை அரசாங்கம். நீங்கள் ஒருபடி பாய்ந்தால் நாங்கள் பத்துப் படிகள் பாய்வோம் என்ற தோரணையில் சுட்டிக்காட்டப்பட் டிருக்கிறது.

ஜனாதிபதி, பிரதமர், பிரதான அமைச்சர்கள் என்று இலங்கை அரசாங்க உயர்பீடம், மக்கள் நலன்கருதிய மனிதாபிமான ரீதியான போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற நிலையில் விடாப்பிடியாக நிற்கும் போது -

சர்வதேசம் எதனைச் சொன்னாலும் நாம் மசிய மாட்டோம் - போர்நிறுத்தம் இல்லை என்ற நிலைப் பாட்டைக் கைவிடமாட்டோம் - விட்டுத் தரமாட்டோம் என்ற அசையாமுகி நிலையில் நிற்கும்போது - பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரின், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கோரிக்கை செல்லாக்காசாகிக் கிடக்கிறது!.

போர்நிறுத்தம் என்ற சொல்லைக் கேட்டாலே அரச உயர் பீடத்துக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது.

முல்லைத்தீவில் காயமடைந்து திருகோணமலைக்குச் செல்வோரில் பலரின் அவயவங்களை அகற்ற வேண்டிய பரிதாபகரமான நிலை ஏற்பட்டிருப்பதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் டாக்டர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். போரின் விளைவுகள் அதனால் பாதிக்கப்பட்டோருக்கு இன்னும் எத்தனையோ ஆண்டுகளுக்கு உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் கற்பனைக்கு அப்பாற்பட்ட பின்விளைவுகளைத் தரப் போகிறது என்பதனைச் சர்வதேச செஞ்லுவைக் குழுவின் டாக்டர் மார்ட்டின் ஹேர்மனின் கூற்று தொட்டுக் காட்டுகிறது.

மனிதாபிமானக் கண்கொண்டு பார்த்தால் இவை தமிழர் மத்தியில் காலங்காலமாக அரைகுறை வாழ்வை; அங்கம் இழந்த வாழ்வை, உடல், உள ரீதியான பாதிப்பை நிலைநிறுத்தும் மறைமுகத்திட்டம் எனவும் கொள்ளலாம் அல்லவா?

அரசியலையும், மனிதாபிமானத்தையும் பிரித்துப் பார்க்கும் தன்மை ஆட்சிபீடத்தில் உள்ளவர்களுக்கு எப்போது பிறக்கும்? மனிதம் பிழைக்க சர்வதேசத்தாலும் உதவமுடியாத கட்டத்தில், நீதிசெய்யுமாறு யாரிடம் கேட்பது என்ற அநாதரவான நிலையில் தமிழர்கள்....

# போதிய தண்ணீர் 'பவுசர்'கள் இல்லாமையால் நீர் விநியோகத்தைச் சீராக்க முடியவில்லை

## நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.4

போதிய தண்ணீர் 'பவுசர்'கள் இல்லாமையால் குடிதண்ணீர் விநியோகத்தைச் சீராக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் தற்போது மூன்று பவுசர்கள் மட்டுமே உள்ளன. அவற்றின் மூலமே குடிதண்ணீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.

தற்போது இருக்கும் இந்த மூன்று பவுசர்களில் இரண்டு தென்மராட்சிப் பகுதியில் உள்ள நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கான குடிதண்ணீர் விநியோக சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

மற்றைய வாகனம் ஊர்காவற்றுறை பிரதேசமக்களுக்கான குடிதண்ணீர் வழங்கல் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளது.

போதிய பவுசர் வாகனங்கள் இல்லாத காரணத்தால் குடிதண்ணீர் வழங்கும் சேவையை மேலும் விஸ்தரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் உள்ள வாகனங்களைப் பயன்படுத்தி சேவையை மேற்கொண்டு வருகின்றோம் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (50-224)

## தற்காலிக இணைப்பு ஆசிரியர்களின் சம்பளம்

யாழ்ப்பாணம், ஏப்.4

இடம்பெயர்ந்து யாழ். கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான ஏப்ரல் மாதத்திற்குரிய சம்பளம் வழங்கப்பட இருப்பதால் குறிப்பிட்ட ஆசிரியர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் சம்பளப் பட்டியலில் கையொப்பமிட்டு வங்கியூடாகப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)

## கொழும்பு - மட்டக்களப்பு இடையிலான ரயில் சேவை நாளை முதல்ஆரம்பம்

கொழும்பு, ஏப்.4

கொழும்பிற்கும் மட்டக்களப்பிற்கும் இடையில் நாளை ஞாயிற்றுக்கிழமை நகரங்களுக்கிடையிலான கடுகதி ரயில் சேவை ஆரம்பமாகவிருக்கிறது.''புதிய உதயதேவி நகரங்களுக்கிடையிலான கடுகதி சேவை'' என இந்த ரயில் சேவைக்கு பெயரிடப்பட்டுள்ளது.

தினமும் காலை 7.45க்கு மட்டக்களப்பில் இருந்து புறப்படும் இந்த ரயில் மாலை 4.30க்கு கொழும்பு கோட்டையைச் சென்றடையும். கொழும்பு கோட்டையில் இருந்து மு.ப. 10.30க்கு புறப்படும் ரயில் மாலை 6.40க்கு மட்டக்களப்பைச் சென்றடையும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. இதன்பிரகாரம் முதலாவது ரயில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கோட்டையில் இருந்து மட்டக் களப்பு நோக்கி புறப்படவிருக்கிறது.

ஏறாவூர், வாழைச்சேனை, வெலிக்கந்தை, பொலனறுவை, ஹிங்காரகொட, கல்லோயாச் சந்தி, கெக்கிராவை, மாகோ சந்தி, குருநாகல் பொல்காவலை சந்தி, வியாங்கொட மற்றும் றாகமை ஆகிய ரயில் நிலையங்களில் மட்டுமே குறிப்பிட்ட ரயில் நிறுத்தப்படும் என இது தொடர்பாக மட்டக்களப்பு ரயில் நிலையத்தின் பிரதம அதிபர்அருணாசலம் சிவனேசராஜா கூறுகிறார். (50)

## இந்து ஆலயங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் நல்லை ஆதீனத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.4

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவி வழங்குவது குறித்து யாழ். மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களின் பரிபாலர்களுடன் ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப 9.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலுக்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல இந்து ஆலயங்களினதும் நிர்வாகிகள், தர்மகர்த்தாக்கள், பரிபாலன சபையினர் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு இந்து அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வர்த்தகப் பிரமுகர்கள், பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ளனர். (50)

## ஆய்வேட்டுக்கான வாய்மூலப் பரீட்சை

யாழ்ப்பாண[illegible] ஏப்.4

2007/08 கல்வியாண்[illegible] பொதுநிர்வாக முதுகலை[illegible] கற்கை நெறிக்குரிய ஆய்வேட[illegible]கான வாய்மூலப் பரீட்சை (Presen[illegible]tion of dissertation and Oral Examination) எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகும். விவரங்களை பட்டப்பின் படிப்புகள் பீட விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (1)

## கோப்பாய் பிரதேச செயலகக் கூட்டம்

கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம், விவசாயக் குழுக்கூட்டம், சுற்றாடல் பாதுகாப்புக் குழுக்கூட்டம் ஆகியன எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செலயக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (1-72)

## சுவாமி பரமானந்தர் குருபூசை நாளை

யாழ்ப்பாணம், ஏப்.4

வதிரி ஸ்ரீபரமானந்தா சிறார், முதியோர் இல்ல ஆச்சிரம ஸ்தாபகர் ஸ்ரீபரமானந்த சுவாமிகளின் 14ஆவது குருபூசை நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப 9 மணிக்கு ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது.

தொண்டர்கள், நலன்விரும்பிகளை இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

## குருநகர் கடற்கரையில் வெடி விபத்து; காயமுற்றவர் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப்.4

குருநகர் கடற்கரைப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் வெடிபொருள் ஒன்று வெடித்ததில் கடற்றொழிலாளி ஒருவர் காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குருநகர் சென். பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த ஸ்ரீபன் சபா (வயது -30) என்ற கடற்றொழிலாளியே வலது காலில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்றுக் காலை தொழிலுக்குச் சென்ற இவர் தொழில் முடிந்து கரை திரும்பிய வேளையில் கடற்கரையில் புதைத்திருந்த வெடி பொருள் ஒன்று வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அவரது வலது கால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை-

நேற்று முன்தினமும் குருநகர் கடற்கரைப்பகுதியில் வெடிபொருள் ஒன்று வெடித்ததில் கடற்றொழிலாளி ஒருவர் கையில் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (50-78)

## பன்றித்தலைச்சியில் பங்குனித்திங்கள் உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையில் பக்தர்கள் கூடுவர்

யாழ்ப்பாணம், ஏப்.4

மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பங்குனித் திங்கள் உற்சவத்தின் நான்காம் வார உற்சவம் நாளை மறுதினம் திங்கள் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தையொட்டி பக்கதர்கள் அதிகமானவர்கள் ஆலய சூழலில் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையொட்டி விரிவான ஏற்பாடுகள் ஆலயத்தில் மேற்கொள்ளபட்டுள்ளதாக ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார். தண்ணீர், சுகாதாரம், போக்குவரத்து வசதிகள் விரிவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொதுமக்கள் அமைதியை ஆலய சூழலில் பேணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பக்கதர்கள் தமது உடைமைகளை கவனமாக வைத்திருக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

ஆலயச் சூழலில் உற்சவகாலத்தில் வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறாக எந்த வியாபார நிலையங்களும் அமைக்கவேண்டாம் எனவும் ஆலய சூழலில் அதற்கென பணிக்கப்பட்டுள்ள தொண்டர்கள் மற்றும் உற்சவ காலத்தில் பணியில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக செயற்படும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய சூழலில் தின் பண்டங்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் 2009 ஆம் ஆண்டுக்கான சுகாதார பரிசோதகரின் வியாபார உரிமத்தை வைத்திருப்பதுடன் சுகாதாரத்தை பேணி விற்பனை செய்யப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-131)

## கோப்பாய் கலாசாலை இறுதிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஏப்.4

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் முதலாம், இரண்டாம் வருடங்களுக்கான இறுதிப்பரீட்சைத் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

முதலாம் வருடத்துக்கு ஏப்ரல் 20 ஆம், 21 ஆம் திகதிகளிலும் 2 ஆம் வருடத்துக்கு ஏப்ரல் 27 முதல் மே 5 வரையும் பரீட்சைகள் இடம்பெறும் என கலாசாலை அதிபர் மலர் சின்னையா அறிவித்துள்ளார்.

பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் காலக்கிரமத்தில் வழங்கப்படும் என்றும் பரீட்சை நிலையங்களை மாற்றி பரீட்சைக்கு தோற்ற விரும்புபவர்கள் கலாசாலை ஊடக பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

2 ஆம் வருடத்தினருக்கான வழிகாட்டல் வகுப்புகள் கலாசாலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் நடத்தப்படவிருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 23 | 05.04.2009 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | ஏகாதசி பி.இ. 01.26வரை |
| நட்சத்திரம்: | ஆயிலியம் மாலை 06.15 வரை |
| [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதல் இன்னிங்ஸில் இந்தியா 375/9


நேற்றைய ஆட்டத்தில் அரைச் சதம் கடந்த இந்திய நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின், சுழல் பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங்

வெலிங்டன், ஏப்ரல் 04

வெலிங்டனில் நடந்துவரும் நியூஸிலாந்து அணிக்கு எதிரான இறுதி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 375 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இறுதி டெஸ்ட் போட்டி வெலிங்டனில் நேற்று ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடுமாறு இந்திய அணியை அழைத்தது.

ஆரம்ப வீரர்களாக ஷேவாக், கம்பீர் ஆகியோர் களமிறங்கினர். இந்த ஜோடி அபாரமாக விளையாடி ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 73ஆக இருந்தபோது இந்த ஜோடி பிரிந்தது.

51 பந்துகளில் 48 ஓட்டங்களைக் குவித்திருந்தபோது ஷேவாக் ஆட்டமிழந்து வெளியேறினார். இவர் ஒரு சிக்ஸர், 7 பவுண்டரிகளை விளாசினார்.

பின்னர் வந்த டிராவிட் நிதானமாக விளையாடி கம்பீருக்குத் துணையாக இருந்தார். 23 ஓட்டங்களை அணிக்காகச் சேர்த்திருந்தபோது கம்பீர் பிராங்கிளினின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இவர் 2 பவுண்டரிகளை மட்டுமே அடித்தார்.

அவரைத் தொடர்ந்து வந்த டெண்டுல்கர் அபாரமாக விளையாடினார். இவர் 85 பந்துகளில் 62 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மாட்டினின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். இவர் 11 பவுண்டரிகளை விளாசினார்.

பின்னர் வந்த லக்ஷ்மன் 4 ஓட்டங்களுடனும், யுவராஜ் சிங் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். 6ஆவது விக்கெட்டாக டிராவிட் ஆட்டமிழந்தார். இவர் 114 பந்துகளில் 35 ஓட்டங்களை சேர்த்தார். இவர் 3 பவுண்டரிகளை மட்டுமே அடித்தார்.

பின்னர் அணித்தலைவர் டோனி - ஹர்பஜன் சிங் ஜோடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை மளமளவென உயர்த்தி நிதானமாக ஆடிக்கொண்டிருந்தபோது டோனி ஓ பிரையன் வீசிய பந்தில் மக்கலத்திடம் பிடிகொடுத்து வெளியேறினார். அடுத்து சகீர்கான் களமிறங்கினார்.

அணிக்காக 78 பந்துகளில் 60 ஓட்டங்களைச் சேர்த்து ஆடிக்கொண்டிருந்த ஹர்பஜன்சிங் மாட்டின் வீசிய பந்தில் விக்டோரியிடம் பிடி கொடுத்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து சர்மா களமிறங்கினார்.

மறுமுனையில் சற்று நிதானமாக ஆடிக் கொண்டிருந்த சகீர்கான் 23 பந்துகளில் 33 ஓட்டங்களைச் சேர்த்து ஓ பிரையன் வீசிய பந்தில் மக்கலத்திடம் பிடிகொடுத்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து பட்டேல் களமிறங்கினார். முதல்நாள் ஆட்டநேர முடிவின்போது இந்திய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓவர்கள் முடிவில் 375 ஓட்டங்களை எடுத்துள்ளது. சர்மா 15 ஓட்டங்களுடனும், பட்டேல் 14 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

### ஒப்பந்தம் ரத்தானதால் நட்டஈடு கோரி

## ஐ.பி.எல். அணி உரிமையாளர்கள் மீது பாகிஸ்தான் வீரர்கள் ஐவர் வழக்கு

ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட்டில் பல்வேறு அணிகளுக்காக விளையாடிய 5 பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் தங்களது ஒப்பந்தத்தை ஐ.பி.எல். அணி உரிமையாளர்கள் ரத்துச் செய்தமைக்காவும், தங்களுக்குச் சேர வேண்டிய தொகை நிலுவைக்காகவும் ஐ.பி.எல். மீது இந்திய நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவுள்ளனர்.

பாகிஸ்தான் அணியின் தற்போதைய தலைவர் யூனிஸ்கான், ஷொய்ப் மலிக், அப்ரிடி, சல்மான் பட், ஷொய்ப் அக்தர் ஆகிய 5 வீரர்களும் மும்பைக்குச் சென்று உயர்நீதிமன்றத்தில் இழப்பீடு கேட்டு வழக்குத் தொடருமாறு சட்டத்தரணி ஒருவரை கேட்டுக் கொண்டுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மும்பை பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பின்னர் இந்திய - பாகிஸ்தான் சர்வதேசத் தொடரை இந்திய அரசு ரத்துச்செய்யக் கோரியதை அடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்த 5 வீரர்களும் ஐ.பி.எல். கிரிக்கெட்டிற்காக இந்தியா வருவதைத் தடைசெய்தது.

இதனால் ஐ.பி.எல். அணி உரிமையாளர்கள் இவர்களது ஒப்பந்தங்களை ரத்துச் செய்தனர். 3 ஆண்டுகள் ஒப்பந்தம் மீறப்பட்டு இடையிலேயே ரத்துச் செய்யப்பட்டதால் இவர்கள் 5 பேரும் ஐ.பி.எல். அணி உரிமையாளர்களிடம் இழப்பீடு கேட்டு வழக்குத் தொடரவுள்ளனர்.

அதாவது தற்போது தென்னாபிரிக்காவிற்கு ஐ.பி.எல். போட்டிகள் மாற்றப்பட்டுள்ளதால் தங்களை விளையாட அனுமதிக்க வேண்டும் இல்லையேல் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்பதே இவர்களது கோரிக்கை.

வீரர்கள் தாங்களாகவே ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பங்கேற்க முடியாது என்று மறுத்தால் மட்டுமே ஒப்பந்தத்தை ரத்துச்செய்ய முடியும் என்பது இவர்களது வாதம்.




## ஐ.பி.எல். தொடரில் அசத்துவேன்!

கொல்கத்தா, ஏப்ரல் 04

சமீபத்திய சர்ச்சைகளைக் கடந்து, ஐ.பி.எல்., ருவென்ரி 20 தொடரில் அசத்துவேன் - என்கிறார் கொல்கத்தா 'நைட் ரைடர்ஸ்' அணியின் தலைவர் கங்குலி. இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.,) சார்பில் இரண்டாவது ருவென்ரி 20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகிறது. இதில் கொல்கத்தா 'நைட் ரைடர்ஸ்' அணியும் பங்கேற்கிறது. சமீபத்தில் அணித் தலைவர் பதவி தொடர்பாக பயிற்சியாளர் ஜோன் புக்கானன் மற்றும் கங்குலி இடையே மோதல் ஏற்பட்டது. இதனை மறந்து சிறப்பாகச் செயல்பட முடியும் என கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்து இவர் மேலும் கூறியவை வருமாறு:-



அணித்தலைவர், பயிற்சியாளர் மோதல் என்பது அடிக்கடி கிரிக்கெட் அரங்கில் நிகழ்வது. இது ஒன்றும் புதிதல்ல. இனி வருங்காலத்திலும் இது போன்ற பிரச்சினைகள் உருவாகும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் அணியின் செயற்பாடுகள் பாதிக்கப்படா. அணி வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டு கோப்பை கைப்பற்றித் தருவர். தென்னாபிரிக்காவில் உள்ள புளோம்போன் டீனில் 'நைட் ரைடர்ஸ்' அணி பயிற்சி மேற் கொள்ளவுள்ளது. இங்குள்ள ஆடுகளம் பயிற்சிக்கு பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க் கிறேன் - என்றார்.

## தென்னாபிரிக்க அணியை பின்தள்ளி மீண்டும் முதலிடம் பிடிக்குமா ஆஸி.?

டர்பன், ஏப்ரல் 04

அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகள் மோதும் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி டர்பனில் நேற்று இரவு நடந்தது. இத்தொடரை கைப்பற்றும் பட்சத்தில் அவுஸ்திரேலிய அணி தரவரிசைப் பட்டியலில் மீண்டும் முதலிடம் பிடிக்கலாம். தென்னாபிரிக்கா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. முதல் போட்டி டர்பனில் நேற்று நடந்தது.

இவ்விரு அணிகளும் இதுவரை 72 ஒருநாள் போட்டிகளில் நேரடியாக மோதியுள்ளன. இதில் அவுஸ்திரேலிய அணி 37 போட்டிகளில் வெற்றிபெற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது. தென்னாபிரிக்க அணி 32 போட்டிகளில் வென்றுள்ளது. மூன்று போட்டிகள் சமனிலையில் முடிந்தன.

காயம் காரணமாக தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் 3ஆவது டெஸ்ட், இரண்டு ருவென்ரி 20 போட்டிகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். காயம் குணமடைந்த நிலையில் இவர் மீண்டும் அணிக்குத் திரும்புகிறார். இதேபோல் காயம் காரணமாக ருவென்ரி 20 தொடரில் நீக்கப்பட்டிருந்த மற்றொரு தென்னாபிரிக்க வீரர் கலீஸ், மீண்டும் அணிக்குத் திரும்புகிறார்.

தற்போதைய ஐ.சி.சி., ஒருநாள் அணிக்கான தரவரிசைப் பட்டியலில் முதல் இரண்டு இடங்களில் முறையே தென்னாபிரிக்கா (125), அவுஸ்திரேலியா (124) அணிகள் உள்ளன. இத்தொடரை அவுஸ்திரேலிய அணி கைப்பற்றும் பட்சத்தில் முதலிடத்திற்கு முன்னேறலாம். தென்னாபிரிக்க அணி 5-0 என கைப்பற்றும் பட்சத்தில் 6 புள்ளிகள் கூடுதலாகப் பெற்று முதலிடத்தில் நீடிக்கலாம். தென்னாபிரிக்க அணி 4-1 அல்லது 3-2 என்ற கணக்கில் தொடரை வெல்லும் பட்சத்தில் முதலிடத்தில் தொடரலாம்.

இரு அணிகளும் தலா இரண்டு வெற்றி பெற்று, ஒரு போட்டி சமநிலையில் முடிந்தால், தென்னாபிரிக்க அணி ஒரு புள்ளி வித்தியாசத்தில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கும். இரு அணிகளும் வெற்றியை நோக்கி களமிறங்குவதால் இப்போட்டியில் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது.

## பாகிஸ்தானில் இப்போதைக்கு கிரிக்கெட்டுக்கு வாய்ப்பில்லை

### ஐ.சி.சி. தெரிவிப்பு

வெலிங்டன், ஏப்.4

பாகிஸ்தானில் இப்போதைக்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடக்க வாய்ப்பு இல்லை என்று ஐ.சி.சி.அறிவித்துள்ளது.

லாகூரில் கடந்த மாதம் 3ஆம் திகதி இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து பாகிஸ்தானில் மீண்டும் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடைபெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) தலைவர் டேவிட் மொர்கான் வெலிங்டனில் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

லாகூரில் நடந்த சம்பவம் பாகிஸ்தான் மக்களுக்கும், கிரிக்கெட் வீரர்களுக்கும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்போதைக்கு பாகிஸ்தானுக்கு, கிரிக்கெட் அணிகளையோ, அதிகாரிகளையோ அனுப்ப முடியாது. அங்கு பாதுகாப்பு விடயத்தில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டால் தான் கிரிக்கெட் அணிகளை அனுப்புவது பற்றி பரிசீலனை செய்ய முடியும்.

பாகிஸ்தான், சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலில் மிகவும் முக்கியமான உறுப்பினராகும். அது சில உலகத் தரம் வாய்ந்த கிரிக்கெட் வீரர்களை உருவாக்கியிருக்கிறது. தற்போதும் அது வலுவான அணியாக விளங்கி வருகிறது. பாகிஸ்தானை தனிமைப்படுத்தக்கூடாது என்பது தான் ஐ.சி.சியின் கொள்கையாகும்.

பாகிஸ்தான் அணியின் வருங்கால போட்டி அட்டவணை நிறைவேற்றப்பட வேண்டும். பாகிஸ்தான் சென்று விளையாட மறுக்கும் மற்ற நாடுகள் பொதுவான இடத்தில் பாகிஸ்தானுடன் விளையாட வேண்டும் என்று நாங்கள் ஊக்கம் அளித்து வருகிறோம்.

லாகூர் சம்பவத்தைத் தொடர்ந்து இந்திய துணைக் கண்டத்தில் 2011ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கோப்பை போட்டி குறித்து மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். இந்தப் போட்டி 4 நாடுகளில் நடைபெறுவது குறித்து இன்னும் உறுதியாகவில்லை.

- இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### உலகக் கோப்பை கால்பந்து தகுதிச்சுற்றுப் போட்டி;

## ஆர்ஜென்ரீனா அதிர்ச்சித் தோல்வி!

லா பாஸ், ஏப்ரல் 04

உலகக் கோப்பை கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் இரண்டு முறை சம்பியனான ஆர்ஜென்டீன அணி பொலிவியா அணியிடம் 1-6 என பரிதாபமாக தோற்றுப்போயுள்ளது. கடந்த 60 ஆண்டுகளில் சந்தித்த இந்த மோசமான தோல்வியால் பயிற்சியாளர் மரடோனா நொந்து போயுள்ளார். பொலிவியாவின் ஒவ்வொரு கோலும் தன் நெஞ்சில் உறைவாள் கொண்டு குத்தியது போன்று இருந்ததாக வேதனையுடன் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆர்ஜென்டீனா அணியின் ஜாம்பவான் மாரடோனா. கடந்த 1986இல் இவரது தலைமையில் அந்த அணி உலகக் கோப்பை வென்று சாதித்தது. தற்போது அணியின் பயிற்சியாளராக அவர் உள்ளார். வரும் 2010இல் தென்னாபிரிக்காவில் நடக்கவுள்ள உலகக் கோப்பை கால்பந்தாட்ட தகுதிச்சுற்றுப் போட்டியில் ஆர்ஜென்டீனா விளையாடி வருகிறது.

பொலிவியா தலைநகர் லா பாசில் நடந்த தகுதிச் சுற்றுப் போட்டியில் சர்வதேச தரவரிசைப் பட்டியலில் 6ஆவது இடத்தில் உள்ள ஆர்ஜென்டீனா, 56ஆவது இடத்தில் உள்ள பொலிவியாவை சந்தித்தது. ஆரம்பம் முதலே பொலிவியா ஆதிக்கம் செலுத்தியது. இந்த அணியின் ஜோகின் பொடேரா 'கற்றிக்' கோல் அடித்துச் சாதித்தார். இவரைத் தவிர மார்சிலோ மார்டின்ஸ், அலெக்ஸ் ரோசா, திதி டொரிக்கோ ஆகியோர் தலா ஒரு கோல் அடிக்க, பொலிவியா 6-1 என வென்றது. ஆர்ஜென்டீனா சார்பில் லூயிஸ் கொன்சலஸ் மட்டும் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார்.

இத்தோல்வியை ஆர்ஜன்டீனா பத்திரிகைகள், தேசிய அவமானமாக குறிப்பிட்டுள்ளன. இது கடந்த 60 ஆண்டுகளில் ஆர்ஜென்டீனாவின் மிக மோசமான தோல்வியாக அமைந்துள்ளது. இதற்கு முன்பு 1958இல் நடந்த உலகக் கோப்பை போட்டியில் செக்கோஸ்லோவாக்கியாவிடம் 6-1 என தோல்வியடைந்தது. பின்னர் 1993இல் கொலம்பியாவிடம் 5-0 என தோல்வி அடைந்தது. இந்த வரிசையில் தற்போதைய தோல்வியும் படுமோசமாக அமைந்துள்ளது.



இது குறித்து மரடோனா கூறியவை வருமாறு:-

இந்த தோல்வியால் எமது ரசிகர்களைப் போல் நானும் பாதிக்கப்பட்டுள்ளேன். பொலிவியா அடித்த ஒவ்வொரு கோலும் என் நெஞ்சில் உறைவாள் கொண்டு குத்தியது போன்று இருந்தது. ஆட்டத்தின் அனைத்துக் கட்டத்திலும் பொலிவியா சிறப்பாக விளை யாடியது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சாரதி அனுமதிப்பத்திரம் குறித்த தகவல்களை சரியாகத் தெரிந்து கொண்டபின் விண்ணப்பியுங்கள்

## மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஏப்.4

புதிய நடைமுறையின் கீழ் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களில் இதுவரை எவரும் சரியான முறையில் தமது விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கவில்லை என்று யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார்.

சரியான தகவல்களைத் தெரிந்து கொண்ட பின்னர் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்யுமாறும் சந்தேகங்கள் இருப்பின் அதுகுறித்துத் தம்மிடம் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தால் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய சாரதி அனுமதிப்பத்திரம் (Smart Card) பெறுவதற்கான விண்ணப்பங்கள் யாழ்.மோட்டார் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகின்றன.

அவற்றைப் பெற்றுச் சென்றவர்களில் இதுவரை எவரும் சரியான முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவில்லை. மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட புதிய நடைமுறையின் அறிவுறுத்தல்களை எவருமே பின்பற்றவில்லை.

விண்ணப்பங்கள் பூரணமாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. அத்துடன் புகைப் படங்களும் சரியான அளவுகளில் இணைக்கப்படவில்லை. விண்ணப்பங்கள் எமது திணைக்கள அதிகாரிகளால் பரிசீலிக்கப் பட்டு சரியான அறிவுறுத்தல்கள் விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படுகின்றன.

எனவே விண்ணப்பதாரிகள் படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்கின்றபோது சந்தேகங்கள் ஏற்படின் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள யாழ்.அலுவலக அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

புதிய சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான புகைப்படங்களை எடுக்கின்ற 'ஸ்ரூடியோ' உரிமையாளர்களும் சந்தேகங்கள் ஏற்படின் எம்முடன் தொடர்புகொண்டு நிறைவான அறிவுறுத்தல்களையும் மாதிரிப் புகைப் படத்தையும் பெற்றுக்கொள்ளலாம் - என்றார் அவர். (50-9)

## மின் இணைப்பு பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

யாழ்.பிரதேச செயலகத்தினால் மின் இணைப்பு பயிற்சி நெறி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சி நெறியை யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டட தொகுதியில் யாழ்.பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ நேற்றுக்காலை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்தப் பயிற்சி நெறிக்கு 20 இளைஞர்கள் இணைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (50-224)

## சிறைச்சாலைக் காவலருக்கான நேர்முகத் தேர்வுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அழைக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

சிறைச்சாலை பாதுகாவலர் பதவிக்கு 2008ஆம் ஆண்டு விண்ணப்பித்து கடந்த மாதம் 24ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் இதுவரை தேர்வுக்கு தோற்றாத யாழ்.மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 17ஆம் திகதி கொழும்பு சிறைச்சாலைப் பாடசாலையில் நடைபெறவுள்ளது என சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

மேற்படி பதவிக்கு வர்த்தமானி அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள உயரம், மார்பு அளவு, கல்வித்தகைமைகள் என்பவற்றை கொண்டிராதவர்களும் குறிப்பிடப் பட்டுள்ள வயதெல்லையைக் கடந்தவர்களும் சமுகமளிக்க வேண்டியதில்லை எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இந்த நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோரின் விவரம் வருமாறு:

எஸ்.சிவராஜன் (நாவற்குழி, கைதடி), கே.லோகேஸ்வரன் (சுன்னாகம்), எஸ்.சேந்தன் (வட்டு.கிழக்கு), வை.துவாகரன் (சில்லாலை தெற்கு), எஸ்.விக்னகுமாரன் (கோப்பாய் வடக்கு), எஸ்.நிரஞ்சன் (மூளாய் மத்தி), இ.மத்தியூஸ் டியோனி (இளவாலை), வை.பிரதீபன் (நல்லூர் கிழக்கு), எஸ்.யுவகாந்தன் (பண்ணாகம்), ரி.தேவமௌலீசன் (அரியாலை மேற்கு), ஏ.மோகனராஜ் (ஏழாலை), கே.யோகேஸ்வரன் (யாழ்ப்பாணம்), ஏ.அகிலன் (கோப்பாய் தெற்கு), ரி.மோதிலால் சுந்தரதாசன் (நல்லூர் கிழக்கு), எஸ்.ஜெனோபன் (கைதடி தெற்கு), எஸ்.அஜந்தன் (நவாலி தெற்கு), கே.திலீபன் (அளவெட்டி மத்தி), ரி.நிர்மலன் (தெல்லிப்பழை கிழக்கு), வி.காண்டீபன் (கரவெட்டி வடக்கு).




## அடைக்கல அன்னை ஆலயத்தில் புனித வார வழிபாடுகள்

வண்ணை,ஏப்.4

யாழ்.அடைக்கல அன்னை தேவாலயத்தில் பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பெரிய சனி மற்றும் உயிர்த்த ஞாயிறு ஆகிய தின ஆராதனைகள், கொண்டாட்டம் என்பன எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறவுள்ளதாகப் பங்குத்தந்தை வண.றெஜி இராஜேஸ்வரன் அடிகள் தெரிவித்தார்.

இதன்படி பெரிய வியாழன்று மாலை 5 மணிக்குத் திருப்பலியும் பாதம் கழுவுதல் நிகழ்வும் இடம்பெறும்.

பெரிய வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குத் திருச்சிலுவை வழிபாடும், காலை 6.30 மணிக்குத் திருச்சிலுவைப் பாதையும் நடைபெறும்.

பெரிய சனிக்கிழமை இரவு 11.15 மணிக்குத் திருவிழிப்புச் சடங்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு உயிர்ப்பு விழாத் திருப்பலியுடன் தவக்காலம் நிறைவடையும். (50-160)

## தென்மராட்சி ஆசிரியர்கள் நெடுந்தீவுக்குக் களப்பயணம்

யாழ்ப்பாணம்,ஏப்.4

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான ஆரம்பக் கல்விச் சீர்த்திருத்தச் செயற்றிட்டத்தின் கீழ் நெடுந்தீவுக்கான களப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் கலந்துகொள்ள விரும்பும் அதிபர்கள், ஆசிரியர்கள் தமது தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

களப்பயணம் எதிர்வரும் 15ஆம் திகதி புறப்பட்டு மறுநாள் அங்கிருந்து திரும்பும்.

பாதுகாப்பு, உணவு, தங்குமிட வசதி ஆகியவை தீவகக் கல்வி வலயத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும். குடிதண்ணீர் கொண்டு வருதல் வேண்டும்.

பாடசாலைகளில் கற்பிக்கும் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் களப் பயணத்தில் பங்குபற்ற முடியுமெனவும் பங்குபற்ற விரும்புவோர் வலய உதவிக் கல்விப் பணிப்பாளருடன் (ஆரம்பக்கல்வி) தொடர்பு கொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (1-207)

## சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் நேரில் முறைப்பாடு செய்ய வசதி

### பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.4

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தமிழ் தெரிந்த பொலிஸார் கடமையாற்றுவதால் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்கள் நேரில் வந்து முறைப்பாடுகளை வழங்கலாமென பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலயப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

சிங்களம் தெரிந்த ஏமாற்றுப் பேர்வழிகள் பொலிஸ் நிலையத்தில் உள்ளவர்களுக்கு பணம் கொடுத்து காரியம் பார்க்க வேண்டுமென பொது மக்களிடம் பணத்தினை கறப்பதாக முறைப்பாடுகள் கிடைப்பதாகவும், இது தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

பொதுமக்களின் எந்தவொரு முறைப்பாடுகளுக்கும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால் சிங்களம் தெரிந்த எவரையும் அழைத்து வரவேண்டாமெனவும் கேட்டுக் கொண்டார். (1-207)



யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற முன்பள்ளிச் சிறுவர்களுக்கிடையில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் பரிசுபெற்ற சிறுவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, செயலாளர் இ.இரத்தினசிங்கம் ஆகியோர் வழங்குவதை முதல் இரண்டு படங்களிலும் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்கள், பெற்றோர்களில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார, மருத்துவ கற்கைநெறி

யாழ்ப்பாணம்,ஏப்.4

சுகவாழ்வுக்கான பயணம் அமைப்பினால் யாழ்ப்பாணத்தில் சுகாதார, மருத்துவ கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தக் கற்கைநெறியில் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் 41, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தக் கற்கைநெறிகளுக்கு பயிற்சிக் கட்டணமாக 4ஆயிரம் ரூபா அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கற்கைநெறிக்குத் தனியார் வைத்தியசாலையில் கடமை புரிவோர் முன்னுரிமை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

## இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு,ஏப்.4

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவை ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்குகளுக்கு இடையே நடைபெற்றுவரும் சுற்றுப் போட்டியில் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள காலிறுதி ஆட்டமொன்றில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் மோதும். (50-36)

## மிதிவெடி விழிப்புணர்வு தினம்

யாழ்ப்பாணம்,ஏப்.

மிதிவெடி விழிப்புணர்வுக்கும் செயற்பாட்டுக்குமான சர்வதேச தினம் இன்றாகும். அதை ஒட்டி இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கலைத்தூது மண்டபம், திருமறைக் கலாமன்றம், பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறவுள்ளது. (204)

## பரீட்சைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் நடத்தப்பட்டு வரும் 2007/08 கல்வியாண்டுக்கான சைவசித்தாந்தம் மற்றும் தமிழ் முதுகலைமாணி கற்கை நெறிகளுக்கான இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரு[ம்] 16ஆம் திகதி ஆரம்பமாகும்.

பரீட்சைக்கான அனுமதி அட்[டை] மற்றும் நேரசூசியினை அலுவலக[த்] தில் பீடாதிபதி அலுவலகம், பட்ட[ப்பின்] படிப்புகள் பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம் என பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (1)

## 'ஏணி' சஞ்சிகை வெளியீடு

கரவெட்டி,ஏப்.4

கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூ[ரி] உயர்தர மாணவர் மன்றத்தின் 'ஏ[ணி]' சஞ்சிகை வெளியீடு எதிர்வரும் செவ்வா[ய்]க் கிழமை முற்பகல் 10 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் இ.கபில்ராஜ் தலைமையில், அதிபர் வே.சிவசிதம்பரம் மேற்பார்வையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக முகாமைக் கற்கை வியற்றுறைப் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் வடமராட்சி வலயப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் வெளியீட்டுரையையும், யாழ்.பல்கலைக்கழகப் பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் சி.விஜயகுமார் ஆய்வுரையையும் ஆற்றவுள்ளனர். (204-70)

## சைக்கிள் உரிமம் வழங்கும் பணி

வடமராட்சி,ஏப்.4

பருத்தித்துறை பிரதேச சபையினால் இவ்வாண்டுக்கான சைக்கிள் உரிமத்தகடுகள் பருத்தித்துறை பிரதேச சபை தலைமை அலுவலகம், குடத்தனை அலுவலகம் ஆகியவற்றில் வைத்து பொது மக்களுக்கு வழ்ங்கப்பட்புடு வருவதாக பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரயோகன் தெரிவித்துள்ளார்.

சைக்கிள் உரிமையாளர்கள் காலம் தவறாது உரிமைத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (1-236)

# மோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 19 ஆயிரம் மெற்றிக் தொன் உணவு உதவி

## யு.எஸ்.எயிட் நிறுவனம் வழங்கும்

கொழும்பு,ஏப்.4

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலக உணவுத்திட்டத்தின் கீழ் உதவுவதற்காக யு.எஸ்.எயிட் நிறுவனம் 15 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருள்களை வழங்க முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம் 14 ஆயிரத்து 700 மெற்றிக் தொன் கோதுமை மா, ஆயிரத்து 40 மெற்றிக் தொன் சமையல் எண்ணெய், 3,750 மெற்றிக் தொன் பருப்பு என 19 ஆயிரத்து 490 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மோதல் சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலக உணவுத் திட்டம் ஊடாக வழங்கப்படவிருக்கின்றது.

3 லட்சம் மக்களுக்கு சுமார் 4 மாதங்களுக்குப் போதுமான இந்த உணவுப் பொருள்கள் எதிர்வரும் ஜூன் மாதம் கொழும்பை வந்தடையும் என யு.எஸ். எயிட் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள யு.எஸ்.எயிட் இலங்கைக்கான பணிப்பாளர் ரெபேக்கா ஹோர்ன் ''இலங்கையில் யுத்தத்தால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கும் மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்குமென உலக உணவுத் திட்டம் கோரியிருந்த உணவுப் பொருள்களில் இவை 21 சதவீதம் எனக் கூறினார். (50)

## திரிபோஷா விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களம் திரிபோஷா பைக்கற்றுக்களை ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும் விநியோகித்து வருகின்றது.

இந்தத் திரிபோஷாப் பைக்கற்றுக்கள் கடந்த மாத இறுதியில் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டன.

பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக ஆரம்ப சிகிச்சை நிலையங்களில் வைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விநியோகிக்கப்படும் என்று சுகாதார சேவைகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (1-224)

# வன்னிக்கு கடல் மார்க்கமாக இதுவரை 2 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்

கொழும்பு,ஏப்.4

வன்னிக்கான தரைமார்க்க உணவு விநியோகம் இடை நிறுத்தப்பட்டதன் பின்னர் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் ஜனவரி முதல் நேற்றுமுன்தினம் வரை 2 ஆயிரத்து 219 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை கடல் மார்க்கமாக அனுப்பி வைத்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் தெரிவிக்கின்றது.

முல்லைத்தீவுக் கரையை அண்டிய புதுமாத்தளன் பாதுகாப்பு வலயப் பகுதிக்கு 1,030 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கப்பல் மூலம் கடந்த வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது.

கப்பலில் இருந்து நேற்று முன்தினம் மாலை உணவுப் பொருள்கள் இறக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொருள்களுடன் 30 மெற்றிக் தொன் காய்கறி மற்றும் உணவு அல்லாத பொருள்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இவை அனைத்தும் இடம்பெயர்ந்த சுமார் ஒரு லட்சம் பேருக்கு 20 நாள்களுக்குப் போதுமானதென்றும் உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி அட்னன் கான் தெரிவித்துள்ளார். (50)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.4

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 55 ஆவது ஆண்டு விழா நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். (204)

# விடுதலைப் புலிகளை அழிக்க எமக்கு அரைமணிநேரம் போதும்

## பிரதமர் ரட்ணசிறி தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.4

விடுதலைப் புலிகளை அழிக்க எங்களுக்கு அரை மணி நேரம் போதும். ஆனால் அவர்கள் வசமுள்ள அப்பாவி பொதுமக்களின் நிலையைக் கருத்தில்கொள்ள வேண்டியுள்ளது என்று கூறியுள்ளார் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க.

இது குறித்து இலங்கை சுதந்திரக் கட்சியின் கூட்டம் ஒன்றில் விக்ரமநாயக்க பேசுகையில் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகளை அரை மணி நேரத்தில் மிகக் கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தி அழித்துவிடக் கூடிய திறமை எங்களது படைகளிடம் உள்ளது.

ஆனால் இராணுவம் அப்படிச் செய்ய விரும்பவில்லை காரணம் விடுதலைப் புலிகள் மனிதக் கேடயங்களாகப் பிடித்து வைத்துள்ள அப்பாவி பொதுமக்களை நாங்கள் கணக்கில் கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கை வளம் பெற நாட்டு மக்கள் ஒன்றுபட வேண்டும். தீவிரவாதத்தை முழுமையாக அழித்துக் கொண்டிருக்கும்நேரம் இது. இந்த வேலை முடிந்து விட்டால் நமது தாயகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல மக்களும் அரசும் இணைந்து செயலாற்ற வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு காத்திருக்கிறது - என்று விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார். (50)

# முகாங்களிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்டோர் வெளியில் சென்று தங்குவதற்கு அனுமதி

கொழும்பு, ஏப்.4

வன்னியில் இருந்து வவுனியா கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வந்து நலன்புரி முகாமிலுள்ள அகதிகளில் 60 வயதுக்கு மேற்பட்டோர் நாட்டின் எந்தப் பகுதியிலும் உள்ள தமது உறவினர்களுடன் தங்கியிருக்கலாம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சர் ரிசாத் பதியுதீன் இந்தத் தகவலை கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் நலன்புரி முகாங்களிலிருந்து வெளியில் செல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ளது என அரசாங்கம் தெரிவித்திருந்த போதிலும் இதுவரை எவரும் வவுனியா நலன்புரி முகாங்களில் இருந்து வெளியில் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பது சுட்டிக் காட்டத்தக்கது.

இதேவேளை எதிர்வரும் காலத்தில் இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வன்னியில் இருந்து வவுனியாவுக்கு வருவர் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (50)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 16.03.2009 திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாண மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலைக்கு பாரம்பரிய முறிவு, நெரிவு வைத்திய நிபுணராக (வெளிவாரி) நியமனம் பெற்ற

**சிவனடியார் சௌந்தரராஜன்**

அவர்களை மனதார வாழ்த்துவதோடு, அவரின் சேவை மேன்மேலும் உயர்ந்து பல பதவிகள் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்:
திரு. திருமதி
கோணேஸ்வரன் ஞானசவுந்தரி (ராணி),
(சகோதரி-ஆயுர்வேத வைத்தியர்).

சிவபூதராயர் வீதி,
சுன்னாகம் தெற்கு.
சுன்னாகம். (64130)



## "விநாயகர் மணி மண்டபம்" திறப்பு விழா

அமரர் திரு.கந்தையா சண்முகம் அவர்களின் ஞாபகார்த்தமாக திரு.சண்முகம் ஜெகதீஸ்வரன் (கன்னைக், புதிய நதியா நகை மாடம்) அவர்களால் மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய அருகில் அமைக்கப்பட்ட

**"விநாயகர் மணி மண்டபம்" திறப்பு விழா**

சர்வதாரி வருட பங்குனி மாதம் 23 ஆம் நாள் (05.04.2009)
ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி.



பெயர்ப்பலகை திறந்து வைத்தல்: மு.நந்தகோபாலன் [பிரதேச செயலர்,வேலணை]
மண்டபத்தைத் திறந்து வைத்தல்: சண்முகம் இராஜேஸ்வரன் [நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்]

நிகழ்வரங்கு திறந்து வைத்தல்:
வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

இவ்விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஒருங்கமைப்புக் குழு,
விநாயகர் மணிமண்டபம், மண்கும்பான்.

(64133)



## ஒருவாரகால முழுநேர கற்கைநெறி...

**Diploma in Computer Hardware Engineering**

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற,
சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப்பெற

உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சிநெறி

◆Assembling ◆Upgrading ◆Trouble Shooting
◆Fault Finding ◆Repairing ◆Servicing
◆Software Installation ◆Configuring Networking Etc.....

✓ பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் தொடர்பான பூரண அறிவினை பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
✓ எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்ரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம்செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை
✓ தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கபபடுகின்றது.

Free Installation CD

Course Fee : 2000/=

வகுப்புக்கள் ஆரம்பம்: 06/04/2009- 09AM

ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
#167, Kasthuriyar Road, Jaffna.
Phone - 021 222 8250/ 0777222422



## கலாலயா

பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

### விடுமுறைக் கால 10 நாள் வகுப்புக்கள்

- கூந்தல் அலங்காரம் : 50 வகையான கொண்டைகள் போடுதல். முடி அயனி பண்ணுதல். முடி சுருட்டுதல். முடி நிறமூட்டுதல். V- Cut, U- Cut, Step வடிவங்களில் முடி வெட்டுதல்.
- Facials மற்றும் மணப்பெண்கள் அலங்காரம். 6 முறைகளில் சேலை அணிதல். கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure.)
- பப்றிக் வர்ணம் தீட்டுதல் : கைக்குட்டை, தலையணை உறை, கண்ணாடி மற்றும் சேலையில் (Saree Painting) வர்ணம் தீட்டுதல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்

தங்கள் வசதிகளுக்கேற்ப கிழமை நாள் அல்லது சனி, ஞாயிறு பயிலமர்வுகளில் கலந்து கொள்ளலாம்.

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

ஆரம்பம் – 09-04-2009 காலை 9.00 மணி

மேலதிக விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்வேறு துறைகளிலும் அப்பழுக்கற்ற சேவை செய்த சர்வகலாவல்லவன் அமரர் பஞ்சலிங்கம்



பஞ்சு என்றும் எம்முடன் இருப்பான். இறைவனடி சேர்ந்து ஓராண்டு கழிந்தாலும் இன்றும் ஆசிரியர்களினதும் கல்விச் சமூகத்தினதும் மனங்களில் இருந்து அவன் மறையவில்லை. என்றும் பஞ்சு எமது மனதைவிட்டு அகலாமல் எம்முடனேயே இருப்பான்.

**"இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளராகப் பணியாற்றிய தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் மறைந்து ஓராண்டு காலம் நேற்று 3ஆம் திகதி பூர்த்தியானது. இதனை முன்னிட்டு இலங்கை ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் எழுதியுள்ள நினைவுகூரல் இங்கு பிரசுரமாகின்றது."**

### 25 வருட கால அப்பழுக்கற்ற தொழிற்சங்க சேவை

1971ஆம் ஆண்டு ஆசிரிய பயிற்சியை முடித்து பலாங்கொடையிலுள்ள பாடசாலையில் முதல் நியமனம் பெற்ற காலம் தொடக்கம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் இணைந்து பலாங்கொடைக் கிளையின் செயலாளராகப் பணியாற்றிய பஞ்சு, 1979ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் திகதி நடைபெற்ற சங்கத்தின் தாய்ச் சங்க மாநாட்டில் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளராக மிகப் பெரும்பாண்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு அன்று தொடக்கம் தொடர்ச்சியாக அப்பதவியை வகித்து வந்தார்.

### நல்ல நண்பன்! நல்ல ஆலோசகன்!!

எனது ஆருயிர் நண்பனாக, மதிநுட்ப ஆலோசகனாக, மூத்த தளபதியாக பஞ்சு செயற்பட்டு வந்தார். அவரின் இழப்பு ஆசிரியர் சங்கத்திற்கும் எனக்கும் ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். பஞ்சுவிற்கு நிகர் பஞ்சனே. அவ்விடத்தை யாரும் ஈடுசெய்யமுடியாது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் பஞ்சுவின் செயற்பாடு, நடத்திய போராட்டம், சங்கத்தின் விசுவாசம், சங்கத்திற்காக உடல், பொருள் ஆகியவற்றின் அற்பணிப்பு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

சங்கத்தின் தீர்மானங்கள் எவையும் பஞ்சுவின் ஆலோசனை, அங்கீகாரம் இன்றி நடந்தேறியதில்லை. சர்வதேச ரீதியில் சர்வதேச அமைப்புகளுடனான தொடர்பும், அணுகுமுறையும், தொடர்பு கொள்ளும் பாணியும் சங்கத்திற்கு பாரிய பாராட்டைப் பெற்றுத் தந்துள்ளது.

### நிறுவனங்களுடனான ஆரோக்கியமான தொடர்பாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களுடனான அணுகுமுறையும், அமைதியான, நிதானமான தொடர்பாடல் முறைகளும் சங்கத்திற்கு நற்பெயரையும் புகழையும் பாராட்டுக்களையும் பெற்றுத் தந்துள்ளது.

சர்வதேச ஆசிரியர் சங்கச் சமேளனக் கூட்டங்களில் பங்குபற்றிய பஞ்சு சங்கத்திற்கும் தமக்கும் ஒரு தனியிடத்தைப் பிடித்திருந்தார். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டிருந்த பிரதேசங்களுக்குச் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேரடியாக அழைத்துச் சென்று காட்டியதோடு விளக்கமாக அறிக்கையிட்டு மீள் கட்டுமானப் பணிகளுக்கு பல வகையில் உதவினார்.

யாழ்.மாவட்டத்திற்கு வருகைதரும் அரசியற் தலைவர்கள், ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற பிரதிநிதிகளை ஏனைய தொழிற்சங்கங்களுடனும் பொது அமைப்புக்களுடனும் இணைந்து சந்திப்புக்களை ஏற்படுத்தி மனித உரிமை மீறல்கள், யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக புள்ளிவிவரங்களுடன் அறிக்கை சமர்ப்பித்த பெருந்தகை பஞ்சலிங்கம்.

பஞ்சலிங்கத்திற்கு, முன்பள்ளிக் கல்வித் துறை உதவிக் கல்விப்பணிப்பாளர் பதவி வழங்கத் திணைக்களத் தலைமை தயக்கம் காட்டிய போதும் பஞ்சுவின் கல்வித்தகைமை, தொழில் சார்ந்த தகைமைகளும் அப்பதவியையாவது கொடுக்கவேண்டும் என்ற சூழ்நிலை தவிர்க்க முடியாததொன்றாக அமைந்துவிட்டது. எனினும் முன்பள்ளித்துறை, பஞ்சு பதவி ஏற்றகாலத்திலிருந்து போர்க்கால நெருக்கடிகளுக்கும் சூழலுக்கும், மத்தியிலும் பாரிய வளர்ச்சி அடைந்துள்ளமை பஞ்சுவின் நிர்வாகத் திறமைக்கும், முகாமைத்துவத்துக்கும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பதவி கொடுக்கத் தயக்கம் காட்டிய திணைக்களத் தலைமை பஞ்சுவின் செயற்பாட்டைக் கண்கூடாகக் கண்டு பின்னர் பாராட்டுக்களை வழங்கியமை, பஞ்சுவின் சாணக்கியத்திற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.

எதிரிகளையும் தன்புன் சிரிப்பால் சாணக்கியத்தால் வெல்லும் திறமைசாலி.

### சர்வகலாவல்லவன்

தொழிற்சங்கப் பணி, கல்விப்பணிகளுக்கு மேலாக சமூக சேவை, கலைத்துறை, நாடகத் துறை, எழுத்துத்துறை, உளநல ஆலோசனையும் வழிகாட்டலும் போன்ற பலதுறைகளில் பஞ்சுவின் சேவையும் அற்பணிப்பும் பலராலும் பாராட்டப்பட்டுள்ளது.

சுருங்கக்கூறின், தமிழினம் ஒருநல்ல கல்வியலாளனை,. மதிநுட்பவியலாளனை, சாணக்கியனை, தொழிற்சங்கத் தலைவனை, சமூக சேவையாளனை, கலைஞனை, நடிகனை, எழுத்தாளனை, கவிஞனை, ஒரு சர்வகலாவல்லவனை இழந்துள்ளது.

பஞ்சு மறைந்து ஓராண்டு காலம் முடிந்த நிலையில், மீண்டும் ஒருமுறை அவரின் சேவையை நினைவுகூர்ந்து அவரின் பணியை முன்னெடுத்துச் செல்ல திடசங்கற்பம் பூணுவதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய மீண்டும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

## புத்தக சாலை

### விஞ்ஞானிகளும் கோட்பாடுகளும்



உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியரும் பிரபல அளவையியல் ஆசிரியருமான எஸ்.எஸ்.மனோகரன் எழுதியுள்ள "விஞ்ஞானிகளும் கோட்பாடுகளும்" நூல் வெளிவந்துள்ளது.

உயர்தர வகுப்பு மாணவர்களின் அளவையியல் பாடத்தில் உள்ள விஞ்ஞானிகளினதும் அவற்றின் கோட்பாடுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமன்றி பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களும் படித்துப் பயன்பெறும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

### வரலாறு




வரலாற்றுப் பாட ஆசிரியர் ஆர்.எஸ்.சந்திரன் எழுதியுள்ள தரம் 10 மாணவர்களுக்கான வரலாறு பாடநூல் வெளி வந்துள்ளது.

இந்நூல் சேது வெளியீடாக அமைந்துள்ளது. மாணவர் கள் புதிய பாடத்திட்டத்திற்கேற்ப தேர்ச்சிமைய கற்றலின் அடிப்படையில் மாணவர்கள் சுயமாக விளங்கிக் கற்பதற்கு உதவியாக வினா - விடை அமைப்பில் இந்தப் புத்தகம் வெளி வந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையில் இலகுவான மொழிநடையில் இலங்கை அரசாங்கத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாட நூலை ஒட்டி இந்நூல் எழுதப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருந்தவராசா தனது ஆசியுரையில் குறிப்பிட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

### வரலாறு மீட்டலும் பயிற்சியும்




குடத்தனை கரையூர் அ.மி.த.க.பாடசாலையின் ஆசிரியர் எஸ்.எம்.கண்ணகுமார் எழுதியுள்ள தரம் 9, 10, 11 மாணவர்களுக்கான வரலாறு பாட 'மீட்டலும் பயிற்சியும்' நூல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டு புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய வரலாறு பாடம் முக்கியம் பெற்றுள்ளது. அந்தப் பாடம் தொடர்பான வினாக்களைத் தொகுத்து மாணவர்கள் பரீட்சை வினாக்களை எதிர்கொள்ளும் வகையில் "மீட்டலும் பயிற்சியும்" எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

## வாசகர் திருமுகம்

### இந்த வீதியைத் திருத்துவார்களா?

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள காயா வீதியையும் அரசடி வீதியையும் இணைக்கும் கலைவாணி வீதி (கலட்டி வீதி) 1978 ஆம் ஆண்டு தார் ஊற்றித் திருத்தப்பட்டது. அதன் பின்பு இன்றுவரை கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது.

இந்த வீதியை வடலியடைப்பு, பல்லசுட்டி, பனிப்புலம், பண்ணாகம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட நாளாந்தம் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர். குன்றும் குழியுமாகக் கிடக்கும் இந்த வீதியில் (ஏறத்தாழ 700m) மிகுந்த சிரமத்துடனேயே பொதுமக்கள் பிரயாணம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கியநிலை காணப்படுகின்றது. மழை காலங்களில் சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் போன்றோரின் உடைகளும் அழுக்கடையும் தன்மை அதிகமாகக் காணப்படுவதால் அவர்கள் மிகுந்த அசௌகரியங்களைச் சந்திக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்த வீதியைத் திருத்தித்தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் பொதுமக்களால் பல மகஜர்களும், மேற்படி சனசமூக நிலையத்தால் பல வேண்டுகோள்களும் விடுக்கப்பட்டன. ஆனால் அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தலைவர், கலைவாணி சனசமூக நிலையம்.

### இடம்பெயர்ந்தோர் இடர்கள்

வன்னியில் இருந்து மக்கள் பல கஷ்டங்களின் மத்தியில் பொருள்களை இழந்து, உறவினர்களை இழந்து, உடலில் காயமடைந்து வந்துள்ளனர். இவர்களில் சுமார் 4000 பேர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்கள் உபசரிக்கப்படும் முறைமை வேற்றுக் கிரக வாசிகளைப் பராமரிப்பதுபோல் உள்ளது.

உதாரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி செல்லும்போது, கைதடியில் சிறுவெளியில் சிறு கூடாரங்களில் நெருக்கமாக இருக்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதனைச்சூழ முட்கம்பிவேலிகள் போடப்பட்டு உள்ளன. இது இராணுவத்திற்கும், இராணுவ நோக்கிலும் பார்க்கும்போது சரியாக அமையலாம். ஆனால் சமூக ரீதியில் பார்க்கும்போது இது ஒரு சமூக உளச் சித்திரவதையே ஆகும்.

ஒரு மரத்தின் கிளைக்கு போதிய சூரிய ஒளி படாது மறைக்கும்போது அது ஒளியை நாடி வளைந்து, வளர்வது போலவே ஒரு சமூகத்திற்கு தேவையான வசதிகள் அற்றுப் போகும் போது அச்சமூகம் வளைவிற்கு உட்படும். இது எதிர்காலத்தில் பல சமூக உளப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

நெருக்கமான இடங்களில் வசிக்கும்போது சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் மீதான துஷ்பிரயோகம் என்பன அதிகரிக்கும். இவை சமூகச் சீரழிவினை ஏற்படுத்தும். உயிருக்குப் பயந்து வந்தவர்களுக்கு சில நாள்களுக்கு கொடுக்கப்படும் உணவு திருப்தி அளிக்கும். சில வாரங்களுக்கு அவர்களது தற்காலிக வாழ்விடம் திருப்தி அளிக்கும். ஆனால் பல மாதங்களுக்கு அவை திருப்தி அளிக்காது. எனவே இவர்களை புனர்வாழ்வுக் கிராமங்கள் என்ற புனைகிராமங்களில் வாழவிடல் சுதந்திரமான சமூக நடமாட்டத்திற்கு தடையாகும். இவர்களைக் கூடாரங்களில் வாழவிடலும் தவறாகும். இதற்குப் பதில் பாடசாலைக் கட்டடங்கள் அல்லது ஆலயங்களைப் பயன்படுத்தலாம். அல்லது இவர்களுக்கு விசேட அடையாள அட்டையினை வழங்கி உறவினர்களுடன் வாழவிடலாம்.

சமூகப் பெரியோர்கள் இவற்றைக் கவனத்தில் எடுக்கலாம். மேலும் இடம்பெயர்ந்தோர் பராமரிப்பில் Psychosocial Specialist சமூக உள நிபுணர்களது ஆலோசனைகள் பெறப்படல் வேண்டும்.

Dr.சி.யமுனாநந்தா.

### ஆடம்பர விழாக்கள் இன்று தேவைதானா?

வன்னியில் தினமும் பெருந்தொகையான தமிழ் உறவுகள் செத்து மடிந்துகொண்டிருக்கிறார்கள். காயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உண்ண உணவின்றி, குடிக்க நீரின்றி, எதுவித மருத்துவ வசதிகள் அற்று, இருக்க இடமின்றி லட்சக்கணக்கானோர் காணப்படுகின்றனர். அடுத்துத் தமக்கு என்ன நடக்கும் என்ற ஏக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அத்துடன் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை என பல பகுதிகளில் தமது குடும்ப உறவுகளைப் பிரிந்து பெருந்தொகையானோர் அடிப்படை வசதிகளின்றி நலன்புரி முகாம்களிலும், பாடசாலைகளிலும் தங்கியுள்ள னர்.

இந்த நிலையில் குடாநாட்டின் இந்து ஆலயங்களில் மகோற்சவங்கள் ஆரம்பமாகியுள்ளன; ஆரம்பமாகவுள்ளன. இந்த மகோற்சவங்கள் ஏட்டிக்குப் போட்டியாக மிக ஆடம்பரமாக நடைபெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. ஒலி, ஒளி, இசைக்கச்சேரி என பெருந்தொகையான பணம் கொட்டப்பட்டு திருவிழாக்கள் பக்தி மறைந்து ஆடம்பர விழாக்களாக மாறிக்கொண்டு வருகின்றன. இவற்றினை முன்னின்று மேற்கொள்ளும் இந்து இளைஞர் சபையினருக்கு, ஆலய நிர்வாக சபையினரும் முண்டு கொடுத்து வருவது மனவருத்தத்திற்குரியதாகும்.

ஒரு புறம் வன்னியில் எமது உறவுகள் செத்து மடிந்து கொண்டிருக்க அங்குள்ள தமது உறவுகளுக்கு என்ன நடந்ததோ எனத் தெரியாமல் குடிநாட்டில் பலர் துன்பத்தில் மூழ்கியிருக்க, இவ்வகையான "மகோற்சவம்" என்ற போர்வையில் நடத்தப்படும் ஆடம்பர விழாக்கள் எவ்வகையில் துன்பப்படும் மக்களுக்கு மன அமைதியைத் தரும்? வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு ஆலயங்கள்/ இந்து குருமார் ஒன்றியம் என்பன நிதி உதவிகளைச் செய்கின்றன. இது மாத்திரம் இம்மக்களுக்கு போதுமானதா?

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டோர் ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவங்களை மக்களின் துயர் துடைக்கும்/ அமைதியைக் கொடுக்கும் மகோற்சவங்களாக நடத்த முன்வருவார்களா?

கொக்குவில். ராஜன்.

### குரங்கின் கையில் பூமாலை போல...

கடந்த 13.03.2009 அன்று பி.ப. 3.30 மணியளவில் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த 750 இலக்க இ.போ.ச பஸ்ஸில் ஏறினேன். நான் இருந்த ஆசனத்திற்கு முன் ஆசனத்தில் இரு இளம்யுவதிகள் அமர்ந்திருந்தனர். சிறிது நேரத்தில் அவர்களில் ஒரு யுவதி தனது கையடக்கத் தொலைபேசியை எடுத்து பஸ்ஸிலுள்ள கணிசமான பயணிகளின் காதுகளில் கேட்கத்தக்கதாக "நீ ஏன்ரா அழுகிறாய்? நான் உன்னை ஏமாத்தமாட்டேன். நீ அழாமல் பேசு நான் உன்னை ஏமாத்தவா இப்படிப் பழகிறன்" என்று இவ்வாறு எத்தனையோ வசனங்களை சர்வ சாதாரணமாகத் தான் எங்கே இருக்கிறேன் என்று தெரியாமல் கதைத்துக் கொண்டிருந்தார். எனக்கென்றால் அவர் அன்று தான் முதன் முதலாக கையடக்கத் தொலைபேசியில் உரையாடுகிறார் போல் தெரிந்தது.

தற்போது எங்கு பார்த்தாலும் கையடக்கத் தொலைபேசி மயம் என்பது எல்லோருக்கும் தெரியும். அது சிலவேளைகளில் எவ்வளவோ உதவி புரிகிறதுதான். ஆனால் அதை எங்கே எவ்வாறு பாவிப்பது என்று தெரியாது மேலே குறிப்பிட்ட யுவதியைப் போன்றோரின் கையில் இருந்தால் அது குரங்கின் கையில் பூமாலை இருப்பது போல் [illegible] இது குறித்த அந்த யுவதிக்கும் அவர் போல நடந்துகொள்வோருக்கும் சமர்ப்பணம்.

நெல்லியடி. வே.அகிலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனிப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஏப்.4

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாணவர்களுக்கான இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட தலைமை அலுவலகத்தில் கணனிப் பயிற்சிநெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சியில் இணைந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் 103/01, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (04-9)

## கிராம சிறுவர்கள் மட்டத்திலான சமாதானக் கல்விச் செயற்பாடுகள்

வண்ணை,ஏப்.4

சமாதான நல்லிணக்க சீப்பியார் பணியகத்தின் ஏற்பாட்டில் கிராம சிறுவர்கள் மட்டத்திலான சமாதான கல்விச் செயற்பாடுகள் நடைபெறவுள்ளன.

இந்தச் செயற்பாடுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அச்சுவேலி, செல்வநாயகபுரம் கிராமத்தில் நடைபெறவுள்ளதாக சீப்பியார் செயற்றிட்ட இணைப்பாளர் செல்வி யோ.சோபனா அறிவித்துள்ளார். (204- 160)

## தொழில்நுட்ப சேவை பரீட்சை நாளை

குருநகர்,ஏப்.4

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவை வகுப்பு II பிரிவு 'ஆ' இல் உள்ள அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை இன்று சனிக்கிழமை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற உள்ளது.

இப்பரீட்சையில் தோற்ற உள்ளவர்களுக்கான அனுமதி அட்டைகள் அவர்கள் கடமைபுரியும் அலுவலகங்களுக்கு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (1-51)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



### ஸ்ரீமதி அன்னபூரணம் பாலகிருஷ்ணபிள்ளை

அன்பு மொழிபேசி அரவணைத்து எம்மை
பண்புடனே உயர்த்தி வாழ வைத்து
பாரினிலே எம்மை எல்லாம் பரிதவிக்கவிட்டு
நீங்கள் இறைபதம் சென்றதேனோ
உங்கள் நினைவுகள் எம் மனதில் நிறைந்திருக்கும்.

கடந்த 06.03.2009 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.04.2009) சனிக்கிழமை மந்திகை கண்ணகை அம்மன் கோயிலில் இடம்பெறும். நாளை (05.04.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபீண்டீகரணக் கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

தோற்றம்: 21.11.1938
மறைவு: 06.03.2009

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(சி/557763)

உப தபாற்கந்தோரடி,
சாவகச்சேரி வீதி, மந்திகை.

சகோதரர்கள், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



## தவக்காலச் சிந்தனை



### உன்னை வாழச் செய்ய நான் வாழ்ந்தும் காட்டினேன்

''நல்ல விடயங்களைப் படிப்பதற்கும், கேட்பதற்கும் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் வாழ்க்கைக்கு ஒத்துவராது. சொல்வது சுலபம் அதை வாழ்ந்து பார்த்தால்தான் தெரியும்'' என்று பலர் கூறுவதுண்டு. இத்தவக்காலத்திலே பல நல்ல விடயங்களை படித்திருப்போம். எவ்வாறு வாழ வேண்டும், எது வாழ்க்கைக்கு உகந்தது என்று பலர் கூறக் கேட்டிருப்போம். பல வழிபாடுகள், தியானங்களில் பங்குபற்றியிருப்போம். ஆனால் அவ்வாறு வாழ்கின்றோமா? அல்லது வாழ முற்படுகின்றோமா? நல்லவர்களாக வாழ்வது என்பது சுலபமான காரியமல்ல என்பது உண்மைதான். சுயநல வட்டத்துக்குள் இருந்து பொதுவாழ்வு வாழ முனைகின்ற போது பல இன்னல்களை, துன்பங்களை சந்திக்க நேரிடும். பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும். ஆனால் சோதனைகளைச் சந்தித்தால்தான் சாதனையை நிலைநாட்ட முடியும். ஒரு சிலுவை மூலம் தான் எமக்கு மீட்புக் கிடைத்தது. அன்று எம் ஆண்டவர் இயேசு சோதனைகளை எதிர்கொண்டுதான் சாவினை வென்று, சாதனை படைத்தார்.

அவ்வாறு நாமும் எமக்கு ஏற்படும் துன்பங்கள், வேதனைகள், விரக்திகள், அவமானங்கள் ஏற்பட்டாலும் பிறரன்பு, மன்னிப்பு, தியாகம், உண்மை போன்ற நல்ல பண்புகளை பின்பற்றி வாழ முற்படுவோம். இப்பூமியிலே மனிதர்கள் இறந்து போனாலும் மனித நேயம் உயிர்பெற உழைப்போம். உரிமைகளை இழந்து போனாலும் உறவுகள் உயிர்பெற உழைப்போம். உடைமைகள் அழிந்து போனாலும் உண்மை உயிர்பெற உழைப்போம். இயேசுவோடு நாமும் மனித நேயமுள்ள உண்மையை நிலைநாட்டும் மனிதர்களாக உயிர்ப்போம். இவை கடினமான காரியம்தான் என்றாலும் இப்பந்தியின் ஆரம்பத்தில் கூறப்பட்டது போல் கிறிஸ்தவர்களாகிய நாம் கூறமுடியாது. ஏனென்றால் எம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து எம்மைப் பார்த்துக் கேட்கிறார்.

''இதற்கு மேல் நான் என்ன செய்திடுவேன்,
உன்னை வாழச் செய்ய, நான் வாழ்ந்து காட்டிவிட்டேன்''
''நானே வாழ்ந்து காட்டியபோது உன்னால் வாழ முடியாதா?
என்னைப் போல வாழ மாட்டாயா?''

தோமஸ் ரோகா,
நாவாந்துறை.

## புதிய அலுவலகத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.4

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிகாமம் கிழக்குப் பிரிவுக்கான புதிய அலுவலகத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோப்பாயில் நடைபெறவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி.கிழக்குப் பிரிவுத் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், அருட்தந்தை கலாநிதி ஈ.ஜே. ஜெபரட்ணம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

பிரதம விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைத் தலைவர் வீ.கே. கணேசலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்குப் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் வதிவிடப் பிரதிநிதி செல்வி எலினா அஜ் மோனிசெசிரா, கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (04-9)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி பரராஜசிங்கம் மனோராணி
### (அருள் ரான்ஸ் போட்)

மண் மகிழ : 25.02.1952 கண் நெகிழ : 05.03.2009

பத்துமாதம் எமைச் சுமந்து
பக்குவமாய் வளர்த்தெடுத்து
பார்புகழ நாம் வாழ வழிவகுத்த
அன்னையே தெய்வம் அம்மா!

ஓடி நீங்கள் சென்ற நாள்
ஒரு மாதம் ஆனதம்மா!
இன்றுபோல் இருக்குதம்மா!
எமை வளர்த்த காட்சியெல்லாம்

ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன
அனைத்தும் உமதன்புக்கு ஈடாகுமா?
அகிலத்தை விட்டு அகன்றே சென்றாலும்
அழியாது உம் நினைவு எமை விட்டு

ஆண்டவன் திருவடியில் இருந்து
ஆறுதல் பெறவும் உமது ஆத்மா
சாந்தி பெறவும் விநாயகர் அருளை
வேண்டுகின்றோம்.

கடந்த 05.03.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கின் இறுதிப் பயணத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அவர் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அருகில் இருந்து இரவு, பகல் பாராது உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (04.04.2009) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
சி.சிவா (மருமகன்– யசோ மோட்டர்ஸ்),
சி.தர்சினி (மகள்– கட்டடத் திணைக்களம்),
பேரப்பிள்ளைகள்.

துணாவில் சந்தி,
சாவகச்சேரி.

(சி.557780)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



சாவகச்சேரி மகளிர் கல்லூரி இல்ல மெய் வன்மைப் போட்டிகள் அண்மையில் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது. முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி கல்வி வலய உடற் கல்வி ஆசிரிய ஆலோசகர் க.சிவகோ சரியார் கல்லூரிக் கொடியிடினை ஏற்றுவதையும் அருகில் கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியை ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (207)



சென்.பெனடிக்ற் றோ.க.த.ஆரம்பப் பாடசாலையில் அண்மையில் குருளைச் சாரணர் அணியினருக்கு சின்னஞ் சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரியமலர், யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் ஜீ.செபஸ்தியாம்பிள்ளை, குருளைச்சாரண மாணவர்கள் ஆகியோர் படத்தில் காணப்படு கின்றனர்.



இல்ங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் நெடுந்தீவுப் பிரிவுத் தொண் டர்கள் சிரமதானம் மூலம் நெடுந்தீவுப் பிரதான வீதியை துப்புரவு செய்தபோது எடுக்கப்பட்ட படம். (படம்:லக்ஸ்மன்)



உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டிகளின் போது கல்லூரி அதிபர் கல்லூரிக் கொடியை ஏற்றி வைத்தார். கொடி ஏற்றி வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.



தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் 'நிஷா' வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதை தானியங்களை அண்மையில் வழங்கினர்.

கழகத் தலைவர் லயன் செ.சரவணமுத்து விவசாயிகளுக்கு விதை தானியம் வழங் குவதையும், அருகில் விவசாயிகளும், கழக உறுப்பினர்களும் நிற்பதைப் படத்தில் காண லாம். (207)



அதிபர் கவிமணி க.ஆனந்தராசாவின் அறுபதாவது அகவை பூர்த்தியை முன்னிட்டு அவரின் சமயப் பணிகளைப் பாராட்டி உரும்பிராய் மகாமாரி அம்மன் ஆலயத்தின் சார் பாக 'சக்தி உபாசகர்' என்னும் விருது வழங்கப்பட்டது.பிரம்மஸ்ரீ க.மு.ஜெகநாதக் குருக்கள் விருது வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.




யாழ்.சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் ஏற்பாட்டில் கொக்கு வில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் ''மாணவர்களின் சமூகப் பின்னணி; கல்வி நிலை; வன்முறையற்ற தொடர்பாடல்'' என்னும் கருப்பொருளில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களைப் படத்தில் காணலாம். (படம்: [illegible])



மகா சிவராத்திரி தினத்தன்று யாழ்.மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள அரசடி விநா யகர் ஆலயத்தில் நாச்சிமார் கோயிலடி ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினர் நடத்திய வில்லிசை யின்போது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீடு

சுழிபுரம்,ஏப்.4

தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் சமூகச்சுடர்-14 இன் கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாக உத்தியோகத்தர் க.பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தொல்புரம் கிழக்கு கிராம உத்தியோகத்தர் ம.ஸ்ரீமுருகவேள், வலி.மேற்கு பிரதேச சபை ச.ச. நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராஜா, இளைப்பாறிய நிறைவேற்றுப் பொறியியலாளர் லயன் த.துரைலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நூலின் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆற்றவுள்ளார். (204-28)

## மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம் தொலைபேசி இலக்கம் மாற்றம்

எமது சங்கத்தின் தொலைபேசியின் புதிய இலக்கம் 222 4511 ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனை சகலருக்கும் தயவுடன் அறியத்தருகின்றோம்.

பொது முகாமையாளர்,
மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்,
02.04.2009 மானிப்பாய்.

## ஆயுர்வேத மருந்து உற்பத்தியும் ஒருவருட நிறைவு நிகழ்வும்

யாழ்ப்பாணம்,ஏப்.4

கோண்டாவில், நல்லூர் பிரதேச சபையின் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையின் மருந்து உற்பத்தி நிகழ்வும், ஒரு வருட நிறைவு நிகழ்வும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மேற்படி வைத்தியசாலையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராகவும், நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மேரியோசப் சாந்தசீலன், கொக்குவில் உப அலுவலகப் பொறுப்பதிகாரி அ.ஆனந்தகுமார், நல்லூர் உப அலுவலகப் பொறுப்பதிகாரி தி.தவராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பெ.கனகசபாபதி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஊல் சிலி வாட்டர் பம்மும், கொம்பி யூட்டரும் விற்பனைக்குண்டு.
71, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு. தொ.பே.: 222 6187
(குகன் பெற்றோல் நிலையத்தில் இருந்து அதே பக்கம் 3 ஆம் வீடு)

## விற்பனைக்கு

29" Flat screen Sierra TV (Made in Korea) யும் 40W Solor panel லும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0778215131

## விற்பனைக்கு

30 Kw, 10 kw Lister மின்பிறப்பாக்கி உடன் விற்பனைக்குண்டு.
மூர்த்தி, சிவன் வீதி, பரவை குளம், திருநெல்வேலி.

## திருமண சேவை

1980 ஆம் ஆண்டு B.Sc.இஞ்சினியருக்கும், 1976 ஆம் ஆண்டு (சைவம்) B.Sc. இஞ்சினியருக்கும், 1977 ஆம் ஆண்டு சாட்டட் எக்கவுண்டனுக்கும்(சைவம்) படித்த அழகான மணமகள் தேவை. பாவம் கூடிய, குறைந்த இஞ்சினியர்கள், டாக்டர்கள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், லிகிதர்கள், வர்த்தகர்கள், வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் எம்மிடமுள்ளன. செவ்வாய் பாவம் கூடிய, குறைந்த டாக்டர்கள், இஞ்சினியர்கள், விரிவுரையாளர்களது சாதகங்களும் உள்ளன.

தொடர்பு:-
கமலக்கண்ணன் திருமணசேவை
தொ.பே.: 0776070862, 0778893692
மனோன்மணி அம்மன் வீதி,
171/7, நல்லூர் வடக்கு வீதி, நல்லூர்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 03 ★ 07 ★ 1937



மறைவு 05 ★ 03 ★ 2009

### கிருஷ்ணர் நல்லம்மா

கடந்த 05.03.2009 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (04.04.2009) சனிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்த கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"கிருஷ்ணர் மலை"
தாவடி வீதி, சுதுமலை, தெற்கு, மானிப்பாய். குடும்பத்தினர்.

## வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.4

நெடுந்தீவு மேற்கு அத்தாப் புல்லு சுடலை வீதியைப் புனரமைக்க பிரதேச சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதியைப் புனரமைக்க 4 லட்சம் ரூபா செலவில் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (204-11)


## வந்து விட்டது



பிரபல பொருளியல் ஆசிரியர்
வே.கருணாகரன் அவர்கள் எழுதிய
க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான
பாட நூல்
பொருளாதார முறைமைகள்
50 GOLDEN JUBILEE RELEASE



Annai Nagaa Food City

# யாழ்.நகரில் முதலாவது

## முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட பல்பொருள் அங்காடி

### சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு



- ★ விலைக்கழிவுகள்
- ★ அன்பளிப்புப் பொருள்கள்
- ★ மகளிருக்கான றெடிமேட் ஆடைகள் 20% கழிவு
- ★ கவரிங் நகைகள் 50% கழிவு
- ★ Prima Chicken 550/=
- ★ அதிக பொருள்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் சீட்டிழுப்பில் பங்குபற்றிப் பல பெறுமதி மிக்க பரிசில்களை வெல்ல முடியும்.
- ★ இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.
- ★ சுத்தமாகப் பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்
- ★ இறைச்சி / பொதி செய்யப்பட்ட இறைச்சி வகைகள்.
- ★ சீஸ், பட்டர், மாஜரின், பால்மா வகைகள் (கீல்ஸ் சொசேஜஸ் -Sausages)
- ★ பழவகைகள், பழரசங்கள்,கேக் மற்றும் கேக் உள்ளீடுகள், ஐசிங் பூக்கள்.
- ★ பலவகையான ஐஸ்கிறீம், குளிர்பான வகைகள், பிஸ்கட், வெளிநாட்டு சொக்லெட் வகைகள்.
- ★ அழகுசாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள்,
- ★ சிகை அலங்காரப் பொருள்கள், வாசனைப் பொருள்கள் (சென்ற் வகைகள்)
- ★ குழந்தைகளுக்கான றெடிமேட் ஆடைகள்

மேலும் பல



அசத்தலான OFFERS

எலிபன் ஹவுஸ் ஐஸ்கிறீம் வகைகளை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

ஏராளம்...
ஏராளம்...

# Annai Nagaa Food City

தினசரி காலை 8.00 - மாலை 6.00 வரை திறந்திருக்கும்.

175, K.K.S. Road, Jaffna. T.P. - 021-5515, 021-7875


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூழ்குமா உலகம்?



பூமியின் வெப்பம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. இதேநிலை தொடர்ந்தால்...

* பனிமலைகள் உருகத் துவங்கிவிடும்; இப்போதே இது ஆரம்பித்து விட்டது.
* உருகி வெளியாகும் தண்ணீர், ஆறு, நதிகளில் பெருக்கெடுக்கும்.
* இதனால் நதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு சுற்றியுள்ள பகுதிகள் மூழ்கும்.
* நதிகளில் பெருகிய வெள்ளம், கடலில் கலக்கும். அதனால் கடல் மட்டம் உயரும்.
* கடல்மட்டம் உயர்ந்தால் கடற்கரை ஒட்டிய பகுதிகளில் வெள்ளம் பெருகும், மூழ்க ஆரம்பிக்கும்.
* கடலை ஒட்டிய தாழ்வான நகரங்கள் மூழ்கிவிடும்.

நகரங்கள் மூழ்கும் அபாயம் உச்சக்கட்டத்தை அடையப்போவது எப்போது தெரியுமா? "2030ஆம் ஆண்டுக்குள் நடக்கலாம்" என்று சர்வதேச அறிவியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

சென்னையில் ஆரம்பித்து, சீனாவின் ஷாங்காய் நகரம் வரை, கடலோர நகரங்கள் பலவும் மூழ்கும் அபாயம் இருக்கிறது என்று எச்சரித்ததை அடுத்து, பல நாடுகள் விழித்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டன.

ஆசியாவில் மிகவும் செல்வச் செழிப்புள்ள சீன தொழில் நகரமான ஷாங்காய், அடியோடு மூழ்கிவிடும் அபாயம் ஏற்படும் என்றும் எச்சரித்துள்ளனர் விஞ்ஞானிகள்.

பல ஆயிரம் கோடி ரூபாய் வர்த்தகம் புழங்கும் ஷாங்காய் நகரில், எங்கு பார்த்தாலும் விண்ணை முட்டும் கட்டடங்கள்தான். மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட சாலைகள், வியப்பின் உச்சிக்குக் கொண்டு போகும் பல மாடிக்கட்டட அமைப்புகள், சுற்றிலும் ஓடும்.

கடலைப் போன்ற பிரமாண்ட யாங்க்ட்சி நதி... இப்படி பல பெருமைகளைக் கொண்ட இந்த நகரம் தான் சீனாவுக்குப் பெரும் செல்வச் செழிப்பைத் தந்து வருகிறது; உலகப் பொருளாதார வளர்ச்சியில் சீனாவை உச்சிக்கு கொண்டு போய்க்கொண்டிருக்கும் இந்த நகர தொழில் வளர்ச்சிதான்.

ஷாங்காய் நகர் கடலுக்குள் மூழ்கும் அபாயம் இருக்கிறது என்ற உண்மை தெரிந்ததும், விழித்துக்கொண்டது சீன அரசு. அதிரடித் திட்டங்களைப் போட்டுச் செயற்படுத்த முனைப்பு காட்டத் துவங்கிவிட்டது.

நிலத்தடி நீரை எடுக்கத் தடை உட்பட பல நடவடிக்கைகளை எடுத்தது. இன்னொரு பக்கம், உலக வெப்பமயமாதலை தடுக்க பெற்றோல், டீசல், காஸ் பயன்பாட்டையும் குறைக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

வரும் 2030இல், கடல் மட்டம் 108 மீற்றர் வரை உயரும் அபாயம் உள்ளதாம். அப்படி கடல்மட்டம் உயருமானால், நிலப்பகுதியில் 375 மீற்றர் உயரம் வரை சூழ்ந்து, பல பகுதிகளை விழுங்கிவிடும்.

சுற்றுச்சூழல் மாசற்ற இயற்கை எரிபொருள் பயன்பாடு அதிகரித்தால் ஆபத்துகளைத் தவிர்க்கலாம். அதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன; ஆனால், மக்களின் ஒத்துழைப்பும் முக்கியம்தானே.

# ஊசியிலிருந்து விடுதலை



ஊசி போட்டுக் கொள்வதென்றால் எல்லோருக்குமே பயம்தான்! தமது நோய் குணமாகாவிட்டாலும் பரவாயில்லை. ஊசி போடாமலிருந்தாலே போதும் என்று நினைப்பவர்கள் நிறையப் பேர். நீரிழிவு நோய் உள்ளவர்கள் இன்சுலினை உட்செலுத்துவதற்காகத் தினமும் ஊசிபோட வேண்டி இருக்கிறது. ஊசி மேலுள்ள பயத்தால் இன்சுலினை உள்ளெடுக்காமல், நீரிழிவு நோயை அதிகப்படுத்தியவர்களும் உண்டு.

இவ்வாறு ஊசியைக் கண்டு அச்சப்படுபவர்களுக்காக மாஸ்கோவைச் சேர்ந்த 'ஷ்ரேயர் லைப் சயின்சஸ்' என்ற நிறுவனம் ஓரல் - ரீ கோசுலின் என்ற ஏரில் 'ஸ்பிறே' மூலமாக இன்சுலினை உட்செலுத்தும் முறையை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது. இது டைப் - 1 மற்றும் டைப் - 2 நீரிழிவு நோயாளிக்கு ரத்தத்தில் இன்சுலின் அளவை அதிகரிக்கச் செய்தும், குளுக்கோஸ் அளவைக் கட்டுப்படுத்தி முறையாகப் பராமரிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான ரேபிட் மிஸ்ட் என்ற கருவியை அமெரிக்க கூட்டு நிறுவனமான 'லெனரெக்ஸ் பயோ ரெக்னோலஜி' உருவாக்கியுள்ளது.



இக்கருவி ஸ்பிறே செய்யப்படும் இன்சுலின், நுரையீரலில் சென்று சேராதபடி புதிய தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இனிமேல் நீரிழிவு நோயாளிகள் ஊசி போட்டுப் போட்டு உடம்பைப் புண்ணாக்கத் தேவையில்லை.

# மண்மூடும் சுவடுகள்

ந.சத்தியபாலன்

பங்குனி வெயில் - சைக்கிளில் வெறும் நாலுமுழத்தோடு தனக்கேயுரிய வேகத்தில் போய்க் கொண்டிருந்த தில்லையப்புவுக்கு உடம்பு எரிந்தது. வியர்வை ஆறாக ஓடியது. அறுபத்து நான்கு வயதிலும் அவரது பழைய 'றலி' வாகனம் விசுவாசமாக உழைத்தது. இருபத்து மூன்று வயதில் கணபதிப் பிள்ளையரின் சுருட்டுக் கொட்டிலில் சுருட்டுக் கட்டிய காலத்தில் பாலத்தடிச் செல்லம்மாவுடன் சீட்டுப் பிடித்துச் சேர்த்த காசில் வாங்கிய சைக்கிள் அது.

காலம் கெட்டு சுருட்டுத் தொழில் முற்றாகப் படுத்துவிடும் நிலைக்கு வந்தபோது, இப்போது ஊரில் தில்லையப்பு என்று அழைக்கப்படுகின்ற தில்லைநாதன் தோட்டம் கொத்தும் தொழிலுக்கு மாறினார். தோட்ட நிலங்களில் அபாயம் எனக்குறிக்கும் மண்டையோட்டுச் சின்னங்கள் நாட்டப்பட்டபோது, முன்யோசனையோடு வாங்கி வைத்திருந்த 'தண்ணிமிசின்' [நீர் இறைக்கும் யந்திரம்] கைகொடுத்தது. அவ்வப்போது கிணறு இறைக்கப் போனார்.

ஏதோ அதிஷ்டவசமாக இடப் பெயர்ச்சிக் காலங்களில் தனது மிசினையும், றலிச் சைக்கிளையும் கண்போல காப்பாற்றிக்கொள்ள அவரால் முடிந்தது.

"எல்லாம் வைரவப் பெருமான் அருள்" என்பார் தில்லையப்பு. கறுப்பு வர்ணம் உதிர்ந்து இரும்பு நிறத்துக்கு மாறியிருந்த சைக்கிளின் பல பாகங்களை மாற்றிக்கொண்டு வெற்றிகரமாய் வாழ்ந்தார். சவால்களுக்கு முகம் கொடுத்தார்-தொண்ணூற்றைந்தில் இடம் பெயர்ந்து, விறகு, தேங்காய் மட்டை கட்டி ஓடவும் சகலருக்கும் கை கொடுத்தது சைக்கிள்.

விறகு கட்டியபடி 'ஆசைப்பிள்ளை ஏத்தத்தைத் தாண்டப்பட்ட பாடும், பாரத்தோடு தள்ளி உருட்டிய துன்பத்தையும் சொல்லும்போது, இப்போதும் அவர் முகத்தில் வியர்வையோடு கண்ணீரும் சேர்ந்து வழியும்.

ஊருக்கு மீண்டும் பழையபடி ஒருவாறு அந்தத் தொழில், இந்தத் தொழில் என்று அவரது 'பாடு' கழிகிறது.

ஊர்த்தெருக்களில் 'ஹீரோ ஹொண்டா'க்களும், 'யமஹா'க்களும், 'ஸ்கூட்டிப்பெப்'பும், 'மேற்று' மாய் பவனி வருகின்ற இந்த நாள்களிலும் அவரது சைக்கிள் போய்வந்து கொண்டு தானிருக்கிறது.

அவரோடு சண்டைபோட்டு, மரக்கறி வியாபாரம் செய்யும் மூத்த மகன் அண்மையில் ஒரு 'மேற்' வாங்கிக் கொண்டான்.

"உந்த விலை குடுத்து வாங்க வேணுமோ? சைக்கிளில் மரக்கறி கட்டினா குறைஞ்சு போவியா?" என்று தில்லையர் சத்தம் போட்டார்.

'சும்மா கிடவுங்கோ ஐயா! உங்களைப்போல இந்த இரும்பு வளையங்களைக் குழாயளையும் நம்பி இந்தக் காலத்திலயும் சீவிக்கச் சொல்லுறியளே? நான் எப்ப ஒரு 'ஹீரோகொண்டா' வாங்கலாமெண்டு பாத்துக் கொண்டு திரியிறன். நீங்கள் என்னடாவெண்டால் சைக்கிளில் யாவாரம் பண்ணச் சொல்லுறியள்...... உங்களைப் போல என்னால சைக்கிள் உழக்க ஏலாதப்பா" என்றான் அவன்.

தனது வண்டியை அவசரமாகக் கிளப்பியபடி, காற்றாய் விரையும் அவனைப் பார்த்தபடி வெயிலில் நின்ற தன்சைக்கிளை மாவடி நிழலில் கொண்டுபோய் நிறுத்தினார் தில்லையப்பு.


# வாரவசந்தம்

# என்ன பொருத்தம்!!

புற்றுநோய் என்றால் என்னவென்பது அனைவருக்குமே தெரியும். மனிதனுடைய கலங்களைக் கறையான் போல அரித்து, உயிரை எடுக்கின்ற புற்றுநோயை ஆங்கிலத்தில் 'கான்சர்' (Cancer) என்று சொல்வோம்.

'கான்சர்' என்றால் இலத்தீன் மொழியில் நண்டு என்று பெயர். இந்த நோய் நண்டு வடிவத்தில் சின்னக் கட்டியாக உருவாவதால், இதைக் கிரேக்கர்கள் நண்டுக்கு ஒப்பிட்டார்கள். அதனால் புற்று நோய்க்கு இந்தப் பெயர் அப்படியே நிலைத்துவிட்டது. இந்த நோய்க்கு மருந்தைக் கண்டுபிடித்தவர் 'லிக்டர் கிரப்ஸ்'. 'கிரப்ஸ் என்றால் ஜெர்மன் மொழியில் நண்டு என்று பெயர்.

ஆக மொத்தம் 'நண்டு' என்ற அர்த்தம் கொண்ட நோய்க்கு அதே 'நண்டு' என்ற பொருள் உடைய 'கிரப்ஸ்' மருந்தைக் கண்டுபிடித்தது உண்மையிலேயே விந்தையான ஒரு விடயம்தான்.



# பணவீக்கம் என்றால் என்ன?



பணத்தின் உண்மையான மதிப்புக் குறைந்து போவதே பணவீக்கமாகும். இதனால் நம்மை அறியாமலேயே பணம் கரைந்துவிடும் என்பதால் அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்படுவர்.

ரூபாயின் மதிப்புக் குறையும் என்பதால் அதற்குத் தக்கபடி வட்டி கிடைக்கும் அளவுக்கு, பணத்தைச் சேமிக்கவோ அல்லது இலாபகரமாக முதலீடு செய்யவோ வேண்டும்.

பல்வேறு பொருள்களின் விலைக் குறியீடு, நுகர்வோர் பயன்படுத்தும் பொருள்களின் விலைக்குறியீடு, மொத்த விற்பனை விலைக்குறியீடு [illegible]களை அடிப்படையாகக் கொண்டே பணவீக்கம் கணக்கிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வன்னியில் உள்ள மக்களுக்கு உதவுவதற்காக மருந்துப்பொருள்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 'வணங்கா மண்' கப்பல் லண்டனிலிருந்து வன்னி புறப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை லண்டனில் இடம்பெற்றது. இந்த வைபவத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் மற்றும் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எட்டுப்பேர் உட்பட பல முக்கிய பிரமுகர்களும் பொது மக்களும் கலந்துகொண்டனர். இந்த வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பும் இலங்கையர்

லண்டன்,ஏப்.4

ஆங்கிலம் பேசத் தெரியாதவருக்கு தம்மால் சேவையாற்ற முடியாதெனக் கூறியதால் இரண்டு தடவைகள் பதவியை இழக்க நேர்ந்த இலங்கையரான தபால் அதிபர் ஒருவர் ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்திற்கு ஐக்கிய ராஜ்ஜியத்தின் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட விருக்கிறார் என்று தெரியவந்துள்ளது.

நோட்டிங்ஹாம் தபால் கந்தோரில் பணிபுரிந்த இலங்கையில் பிறந்தவரான தேவா குமாரசிறி என்ற தபால் அதிபர் வாடிக்கையாளர்கள் தம்முடன் ஆங்கிலத்தில்தான் பேசவேண்டும் அப்பொழுதான் தம்மால் அவர்களைப் புரிந்துகொள்ள முடியும் என்று சொல்லி வந்தாராம். இது பகிரங்கமானதால் இரண்டு தடவைகள் பதவியை இழக்கும் நிலை அவருக்கு ஏற்பட்டிருந்தது.

இப்பொழுது ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கு வேட்பாளராகப் போட்டியிடும் ஆசையில் மிதக்கத் தொடங்கியிருக்கிறார்.

இது தொடர்பாக அண்மையில் பிரிட்டிஷ் சுதந்திரக் கட்சியின் தலைவர் நிஜெல் பரேஜ்ஜையும் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

ஐரோப்பிய தேர்தலில் பிரிட்டன் சார்பில் தாம் பிரசாரம் செய்யப்போவதாகவும் பிரிட்டனில் தொழில் தேடி வருகிறவர்கள் ஆங்கிலம் கற்றிருப்பது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார். (ப)

# இம்மாதம் 25ஆம் திகதி வரை தபால் மூலம் வாக்களிக்கலாம்

கொழும்பு, ஏப். 4

மேல் மகாணசபைக்கான தபால் மூல வாக்கெடுப்பின் போது வாக்களிக்கத் தவறிய அரச ஊழியர்கள் தாம் விரும்பிய வேறொரு தினத்தில் கடமை நேரத்தின் போது வாக்களிக்க முடியும் என்று தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இறுதி வாக்கெடுப்பு இடம்பெறும் தினமான இம்மாதம் 25 ஆம் திகதி பிற்பகல் 4 மணிவரை தபால் மூல வாக்குகளைப் பதிவு செய்ய அரச ஊழியர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் தேர்தல்கள் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

தபால் மூல வாக்களிப்பு நேற்று முன்தினம் இரண்டாம் திகதி ஆரம்பமாகி நேற்று மூன்றாம் திகதிவரை இடம்பெற்றது.

மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த 35 ஆயிரத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வாக்களிப்பு எந்தவிதப் பிரச்சினையுமின்றி சுமூகமான முறையில் இடம் பெற்றது என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்தது.

## அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய சாரதிகள் கைது

யாழ்ப்பாணம்,ஏப்.4

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த இரண்டு உழவு இயந்திரங்களை கொடிகாமம் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

உழவு இயந்திரங்களின் சாரதிகள் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்குகளை விசாரித்த நீதிவான் இருவரையும் எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(1-207)

## சாவகச்சேரி கிளையின் நிறைவு நிகழ்வுகள்

மட்டுவில்,ஏப்.4

சாவகச்சேரி கொமர்ஷல் வங்கிக் கிளையின் மூன்றாவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வங்கி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வங்கி முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் அருணலு கணக்கை வைத்துள்ள 32 மாணவர்கள் புலமைப் பரிசிலின் சேமிப்புச் சான்றிதழைப் பெற உள்ளனர்.

(1-59)

# கிழக்கில் மிதிவெடியகற்றும் பணிகள் இம்மாத இறுதிக்குள் பூர்த்தியாகும்

யுத்தகாலத்தில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளை அகற்றும் பணிகள் கிழக்கு மாகாணத்தில் இம்மாத இறுதிக்குள் முடிவடைந்துவிடும் என மிதிவெடிகள் தொடர்பான தேசிய செயலாற்றுக் குழுத் தலைவர் எம்.எஸ். ஜயசிங்க தெரிவித்தார்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதத்திற்குள் இப்பணியைப் பூர்த்திசெய்ய உத்தேசிக்கப்பட்டிருந்தபோதிலும் மன்னார் மாவட்டத்திலும் இப்பணியை மேற்கொள்ள வேண்டியிருந்தமையினால் இப்பணி 4 மாதங்கள் தாமதமடைந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை 98 சதவீதமான மிதிவெடி அகற்றும் பணிகள் கிழக்கு மாகாணத்தில் முடிவடைந்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ள எம்.எஸ். ஜயசிங்க ஜப்பானிய அரசாங்கம் இம்மாதம் 7 லட்சம் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது. 2002 முதல் 2008 வரையிலான காலப் பகுதியில் 433.32 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட பணி களின் போது 157, 079 வெடிபொருள்கள் அகற்றப்பட்டன என்றும் தெரிவித்தார்.

(50)

## மன்னார்-தாழ்வுபாடு வீதியில் இளைஞர் சுட்டுக்கொலை

மன்னார் - தாழ்வுபாடு பிரதான வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி 9.55 மணியளவில் மன்னார் வைத்தியசாலை பிரதான வீதியிலுள்ள படப்பிடிப்பு நிலையத்தில் வேலையை முடித்த பின்னர் பட்டித்தோட்டப் பகுதியில் உள்ள தனது வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்த சமயம் அவரைப் பின் தொடர்ந்து வந்த ஆயுததாரிகள் அவரை சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

மன்னார் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளை மேற்கொண்ட மன்னார் மாவட்ட நீதிவான் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-சி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்


### திருமதி அபிராமி பார்த்தீபன்

(இலங்கை கல்வி நிர்வாக சேவை)

எமது செயலகத்தில் சமூக சேவைகள் கிளையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக கடமையாற்றி தற்போது கல்வி நிர்வாக சேவைக்குப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் *திருமதி அபிராமி பார்த்தீபன்* அவர்களுக்கு எமது அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் சார்பில் பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் இச்சேவையில் மேலும் சிறப்பான பணியாற்றி கல்வித்துறையின் வளர்ச்சிக்காக உதவுவதுடன் பல பதவி உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்,
*உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,*
பிரதேச செயலகம் கரவெட்டி.


## கண்ணீர் அஞ்சலி



புலோலி, மந்திகை, துறையாமூலை முருகன் வெதுப்பக உரிமையாளரும், யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க வடமராட்சிக் கிளைத் தலைவருமான ந.சூரியமூர்த்தி அவர்களின் பாசமிகு சகோதரன்

**நடேசு சுந்தரமூர்த்தி**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

நெல்லியடி,
கரவெட்டி.
(சி/557787)
யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
வடமராட்சிக் கிளை.


## இறைச்சிக் கோழி விற்பனை

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**செம்மணி பாம்**
77/3, செம்மணி வீதி,
நாயன்மார்க்கட்டு.

## விற்பனைக்கு

Hero Stream 49 cc மோட்டர் சைக்கிள், வெஸ்பா ஸ்கூட்டர் மற்றும் அம்பிளிவயர் 100w, 2Box10"என்பன விற்பனைக் குண்டு.

தொடர்பு:-சி.சி.நாதன்,
[illegible] வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
T.P. 0776146434


# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் அம்பிகைபாகன்

(அம்பிகா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)



மாவிட்டபுரம், வீமன்காமம் வடக்கினைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு, மடத்தடி ஒழுங்கையினை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அம்பிகைபாகன் நேற்று முன்தினம் (02.04.2009) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடத்தடி ஒழுங்கை,*
*கோண்டாவில் மேற்கு.*

தகவல்:
அ.நாகரத்தினம் (மனைவி).

## செல்வி கதிர்காமத்தம்பி ராகினி

(ஆசிரியை, வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலயம்)



செல்வி கதிர்காமத்தம்பி ராகினி (வவு/திருஞானசம்பந்தர் வித்தியாலயம்) 31.03.2009 செவ்வாய்க்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னார் கந்தப்பர் கதிர்காமத்தம்பி (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியர்), சரஸ்வதி தம்பதியினரின் ஏகபுத்திரியும் கேசவமூர்த்தி (தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை), ஸ்ரீபாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்; கிரிஜா (ஆசிரியை, யா/ஞானசாரியார் கல்லூரி) அவர்களின் மைத்துனியும், அமரர் கந்தசாமி, பாலசிங்கம் (Australia) ஆகியோரின் அன்பு மருமகளும், சவுந்தலாதேவி, விக்னேஸ்வரமூர்த்தி(ஆசிரியை, யா/பொலிகண்டி இ.த.க.பாடசாலை) அவர்களின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (05.04.2009) அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 9.00 மணியளவில் ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகப்பா வளவு,கொற்றாவத்தை,*
*வல்வெட்டித்துறை.*
*0602219637*

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க
# 150 லட்சம் கோடி ரூபாவை ஒதுக்கத் தீர்மானம்

## ஜி - 20 நாடுகள் மாநாட்டில்

லண்டன், ஏப்ரல் 04

உலகளாவிய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க ரூ. 150 லட்சம் கோடியை ஒதுக்கீடு செய்ய லண்டன் ஜி - 20 மாநாட்டில் தலைவர்கள் ஒப்புக்கொண்டனர். லண்டனில் ஆரம்பமான ஜி - 20 நாடுகளின் மாநாட்டில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, தென் ஆபிரிக்கா, பிரேசில், இந்தியா ஆகியவை உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றி, உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டனர்.



லண்டனில் இடம்பெற்ற ஜி-20 உச்சிமாநாட்டில் பங்குபற்றிவிட்டு, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, தமது பாரியார் மிச்சில் சகிதம் நாடு திரும்பினார். லண்டன் ஸ்டேன்ஸ்டட் விமான நிலையத்தில் அவர் கையசைத்து விடை பெறுகிறார்.

மாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள் அனைவருமே உலக பொருளாதார சீர்குலைவு விவகாரத்தில் தங்களுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி விட்டு, பொருளாதார நிதி ஆதாரத்தை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகளை காண்பது குறித்து தங்களது ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளனர்.

மாநாட்டையொட்டி, உலகத் தலைவர்களுக்கு பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுண் புதன்கிழமை அதிகாரபூர்வ விருந்து அளித்து உபசரித்தார். இதில் அவர் பேசுகையில், ''இன்னும் சில மணி நேரங்களில் பொருளாதார நிலைமையை சீரமைப்பதிலும், அதற்காக மேற்கொள்ளவேண்டிய சீர்திருத்தங்கள் குறித்தும் அனைவரும் ஒப்புக்கொள்ளும் விதத்திலான ஒரு நிலையை நாம் எட்டுவோம். என கருதுகிறேன்'' என நம்பிக்கை தெரிவித்தார்.

இந்நிலையில், வியாழக்கிழமை நடந்த மாநாட்டில் உலகப் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து உலகத் தலைவர்கள் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டனர். பல மணி நேர ஆலோசனைக்குப் பின்னர், உலக நாடுகளின் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க பன்னாட்டு நிதியத்துக்கும், உலக வங்கிக்கும் 150 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய உலகத் தலைவர்கள் ஒப்புக்கொண்டனர். பின்னர் இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றிலும் அவர்கள் கையெழுத்திட்டனர்.

இந்த அறிவிப்பை பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுண் வியாழக்கிழமை மாலை வெளியிட்டார். இது பற்றி அவர் குறிப்பிடுகையில், ''இந்த நிதி ஒதுக்கீடு மூலம் சரிவைச் சந்தித்துள்ள உலகப் பொருளாதாரத்தை சீர்படுத்தி வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முடியும். அதிக அளவில் புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்க இயலும் என்ற நம்பிக்கையும் உருவாகி இருக்கிறது'' என்றார்.

''முதற் கட்டமாக 111 லட்சம் கோடியும், மீதமுள்ள 39 லட்சம் கோடி ரூபாய் அடுத்த 2 ஆண்டுகளுக்குள் வழங்கப்படும். இந்தப் பணம் பொருளாதார நெருக்கடியில் கடுமையாக சிக்கித் தவிக்கும் அனைத்து நாடுகளுக்கும் வழங்கப்படும். இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் அடுத்த ஆண்டு இறுதிக்குள் 4 சதவீத வளர்ச்சி கிடைக்கும்'' என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

''உலகம் முழுவதும் வங்கிகளின் செயற்பாட்டு முறைமைகளும், அவை வழங்கும் கடன் விகிதங்களை ஒழுங்குபடுத்தும் கொள்கைகளும் உருவாக்கப்படும். தவிர உலக நிதி நிலைமையின் ஸ்திரத் தன்மையை அவ்வப்போது அறிந்து எச்சரிக்கை செய்ய ஒரு குழுவை அமைக்கவும் உலகத் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்'' என்று அவர் குறிப்பிட்டார்.

''இந்த நாள் வரலாற்றில் மறக்க முடியாத ஒரு நாள். பொருளாதாரச் சீர்குலைவை சமாளிப்பது பற்றி பேசிக்கொண்டிருந்த நாம் இப்போது அதற்குத் தீர்வு காண்பதை செயல்படுத்துவதில் உறுதியான முடிவை எடுத்து இருக்கிறோம்'' என்றும் கோர்டன் பிரவுண் தெரிவித்துக்கொண்டார்.

உலகின் மொத்த பொருளாதார சக்தியில் 85 சதவீத பங்கை ஜி - 20 நாடுகள் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழில்வள நாடுகளின் பொருளாதாரத்தை மட்டும் காப்பாற்றும் நடவடிக்கைகளை எடுத்து சிக்கலை ஏற்படுத்தாதீர்

## இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்து



லண்டன், ஏப்ரல் 04

''பொருளாதார நடவடிக்கைகள் முடங்கிவிட்டன. ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் அனைவருமே தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், உங்கள் நாட்டுப் பொருளாதாரங்களை மட்டும் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து நிலைமையை மேலும் சிக்கலாக்காதீர்கள்'' என தொழில்வள நாடுகளின் தலைவர்களுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வேண்டுகோள் விடுத்தார்.

லண்டனில் புதன்கிழமை இரவு நடந்த ஜி - 20 அமைப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் பேசுகையில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

''பொருளாதார நடவடிக்கைகள் சுருங்கிவிட்டன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிட்டது. ஆதலால், எல்லா நாடுகளுமே தங்களைப் பற்றி மட்டுமே கவலைப்படுவது புரிந்துகொள்ளத்தக்கதே'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''கடந்த சில ஆண்டுகளாக இடைவிடாமல் பிரசாரம் செய்யப்பட்டு வளரும் நாடுகளையும் சம்மதிக்கவைத்து, உலகமயமாக்கலும் தாராளமயமாக்கலும் பிற நாடுகளிலும் புகுத்தப்பட்டுள்ளன. இச்சமயத்தில் தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்கினால் அது வளரும் நாடுகளை ஒதுக்கியது போலாகிவிடும்'' என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

''உலகமே பொதுச் சந்தை என்ற சிந்தனையில் தாராளமயத்தை அறிமுகப்படுத்திவிட்டு, பெரும்பாலான மக்களையும் உழைப்புக் காரணிகளையும் கொண்டுள்ள வளரும் நாடுகளைப் புறக்கணித்துவிட்டு மேற்கொள்ளப்படும் எந்தவித புத்துயிர் ஊட்டும் நடவடிக்கைகளும் பயன்தரமாட்டா என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்'' என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

''இந்தச் சிக்கலிலிருந்து மீள நீண்ட காலத் திட்டங்களும் நடவடிக்கைகளும் அவசியம். அவற்றில் எல்லோருக்கும் பங்கு இருக்கவேண்டும். எல்லா நாடுகளிலும் பொருளாதாரத்தை மீட்சிபெறச் செய்வதற்கு பன்னாட்டுச் செலாவணி நிதியம் போன்ற அமைப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்றும் மன்மோகன்சிங் கேட்டுக்கொண்டார்.

''உள்நாட்டுப் பிரச்சினை எவ்வளவு தீவிரமாக இருந்தாலும், பன்னாட்டுச் செலாவணி நிதியத்துக்கு அளிக்கும் சந்தாவைத் தொழில்வள நாடுகள் பல மடங்காக அதிகரிப்பதன் மூலம் வளரும் நாடுகளில் தொழில், வர்த்தக நடவடிக்கைகளை எளிதாக முடுக்கிவிடலாம். இதன் பலன் தொழில்வள நாடுகளுக்குத்த[illegible] கிடைக்கும்'' என்றும் அவர் எடுத்து[illegible].

''வளரும் நாடுகள் தங்க[illegible] தொழில்துறைக்கும், வர்த்தகத் து[illegible] தேவைப்படும் ''உலக அளவில் [illegible], நிதித்துறை நடவடிக்கைகளைச் சீர்படுத்தி தரப்படுத்த வேண்டும். இதை படிப்படியாகச் செய்யவேண்டும். அதேசமயம், இதை ஒருசில நாடுகளில் மட்டும் மேற்கொள்ளாமல் உலக அளவில் மேற்கொள்ள வேண்டும். இதனால் பிரச்சினை தொடங்குவதற்கு முன்னரே அதைத் தரமான கணக்கு தணிக்கை நடவடிக்கைகள் மூலம் அடையாளம் கண்டுவிட முடியும்'' என்றும் அவர் ஆலோசனை தெரிவித்தார்.

''வங்கிகளும் நிதி நிறுவனங்களும்தான் பொருளாதார மீட்சிக்கான கருவிகள். எனவே, இந்தச் சிக்கலான நேரத்தில் சரியாக நிர்வகிக்கப்படாத அவற்றுக்கு ஏன் அரசு நிதி ஒதுக்கி விரயம் செய்யவேண்டும் என பொதுமக்கள் கேட்கக்கூடும். ஆனால், இப்படிச் செய்வதன் மூலம்தான் பொருளாதார மீட்சியை அடைய முடியும் என்பதை நாம்தான் பொறுமையாக விளக்கியாக வேண்டும்'' என்றும் அவர் கூறினார்.

# ஜி - 20 மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தோர் மீது தடியடி

லண்டன், ஏப்ரல் 04

லண்டன் நகரில் ஆரம்பமான ஜி-20 மாநாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து, வங்கிக் கட்டடம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த முற்பட்டவர்களை பொலிஸார் தடியடி நடத்திக் கலைத்தனர். அச்சமயம் மயங்கி விழுந்த ஆர்ப்பாட்டக்காரரொருவர் மரணமடைந்தார்.

இது குறித்து, பொலிஸார் தெரிவிக்கையில், ''அந்நபர் உடல் நலக்கோளாறால் பாதிக்கப்பட்டு வந்தவர் என்ற தகவல் வெளியாகியுள்ளது. தடியடிபட்டு அவர் மயங்கி கீழே விழவில்லை'' என்றனர்.

''ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸார் மீது, போத்தல்களை வீசி தாக்குதல் நடத்தினார்கள். அதனால்தான், தடியடிப் பிரயோகம் நடத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சிலர் வன்முறைகளிலும் ஈடுபடத் துணிந்தனர்'' என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

''பொலிஸார் தடிகளால் கூடியிருந்தவர்களைத் தள்ளினர். அப்போது அந்நபரும் தள்ளப்பட்டார். அதையடுத்து, அவர் மயங்கி விழுந்தார். பிரேத பரிசோதனைக்குப்பின்புரே உண்மை வெளியாகும்'' என ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவர் குறிப்பிட்டார்.

# பாகிஸ்தானின் முக்கிய நகரங்களைத் தாக்க மத போதகர் வேடத்தில் 14 பேர் ஊடுருவல்

## உளவுத்துறை எச்சரிக்கை

இஸ்லாமாபாத், ஏப்ரல் 04

பாகிஸ்தானிலுள்ள முக்கிய நகரங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக மத போதகர்கள் போல மாறுவேடத்தில் சுமார் 14 தற்கொலைப்படை தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர் என பாகிஸ்தான் உளவு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளிலும் தமது இயக்கத்தினர் தாக்குதல்களை நடத்துவார்கள் என தலிபான் இயக்கத் தளபதி பைதுல்லா மசூத் அறிவித்த சில தினங்களில் அந்நாட்டு உளவு நிறுவனம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

நாட்டில் முக்கியத்துவம் வாய்ந்த அரசு, தனியார் நிறுவன கட்டடங்கள், விடுதிகள், பொது இடங்கள் ஆகியவை தாக்குதல்களுக்கு இலக்காகலாம். தீவிரவாதிகளின் தாக்குதல்களை தவிர்க்கும் பொருட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்படவேண்டும் என பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு உளவு நிறுவனம் விடுத்துள்ள எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லாகூரில் கடந்த திங்கட்கிழமை பொலிஸ் பயிற்சி மையத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதனைப்போல, வடமேற்கு மாகாணத்தில் அரசு அலுவலகங்கள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளார்கள். இதற்காக தற்கொலைப் படை தீவிரவாதிகளில் 7 பேர் ஊடுருவியுள்ளனர் என்றும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

இந்தத் தகவல்களை ரைம்ஸ் நாளிதழுக்கு தாம் அ[illegible] அதிகாரிகள் தெரிவித்து[illegible].

# இந்திய - பாக். உறவு நிலையின் பதற்றத்தை தணிக்க அமெ. முயற்சி

வாஷிங்ரன், ஏப்ரல் 0 4

இந்தியா-பாகிஸ்தான் இடையிலான உறவுகளில் பதற்றத்தைத் தணிப்பதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளில் ஒபாமா நிர்வாகம் ஈடுபட்டு வருகிறது என காஷ்மீர் பற்றி நேரடியாகக் குறிப்பிடாமல் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க முப்படைகளுக்கான செனட் குழுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. இதில் காஷ்மீர் பிரச்சினையில் பதற்றத்தை தணிக்க ஒபாமா நிர்வாகம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என செனட்டர் மார்க் உதல் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அமெரிக்க முப்படைகளின் கொமாண்டர் ஜெனரல் டேவிட் எச். பெட்ரியஸ் பதில் அளிக்கையில், ''இதுவிஷ[illegible] ஆப்கானிஸ்தானுக்[illegible] சிறப்புத் தூதர் ரிச்சர்ட் ஹோல்புரூக்கும், நானும் ஏற்கனவே ராஜீய அளவிலான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்'' என்றார்

செனட் குழுவில் ஜெனரல் டேவிட் பெட்ரியஸ் மேலும் குறிப்பிடுகையில், ''இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அண்மையில் அமெரிக்காவுக்கு வந்தார். அப்போதும் இது பற்றி நாம் அவருடன் விவாதித்தோம். பின்னர், அண்மையில் வாஷிங்ரன் வந்த இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் சிவ்சங்கர் மேனனுடனும் இதுகுறித்து விவாதிக்கப்பட்டது'' என்றார்.

''இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையிலான உறவுகளில் பதற்றத்தைத் தணிப்பது மிகவும் முக்கியம். இதை உணர்ந்து, ஒபாமா நிர்வாகம் தேவையான அனைத்து முன்முயற்சிகளையும் எடுத்து வருகிறது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலக அரங்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தி சென்னையில் பாதிரியார்கள் உண்ணாவிரதம்

## முடித்து வைத்தார் பழ. நெடுமாறன்

சென்னை, ஏப் 04

**இலங்கையில் போரை நிறுத்தி தமிழர்களைப் பாதுகாக்கக்கோரி சென்னையில் நேற்றுமுன்தினம் கிறிஸ்தவ பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள் ஊர்வலமாகச் சென்று உண்ணாவிரதம் இருந்தனர்.**

தமிழக ஒன்றிப்பு கிறிஸ்தவ அருட்பணியர் மனித உரிமை அமைப்பு சார்பில் இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்தும் உடனடியாகப் போரை சிங்கள அரசு நிறுத்தக்கோரியும் சென்னையில் நேற்றுமுன்தினம் ஊர்வலம் நடந்தது. மன்றோ சிலையில் இருந்து ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தில் ஏராளமான பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள் கலந்து கொண்டனர்.

அமைதியான முறையில் புறப்பட்ட இந்த ஊர்வலம் காமராஜர் சிலை வழியாக அண்ணாசாலை வழியாக சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே சென்றடைந்தது.

அங்கு கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்தனர். அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மோகன் லார் பீர், கத்தோலிக்க சென்னை உயர் மறை மாவட்ட பேராயர் சின்னப்பா, ஆயர் லாரன்ஸ் பயஸ், சி.எஸ்.ஐ.சென்னை பிஷப் தேவசகாயம், அவை அருட்சகோதரி லீமா ரோஸ், பேராசிரியை சரஸ்வதி உட்பட ஏராளமானவர்கள் ஊர்வலத்திலும் உண்ணாவிரதத்திலும் கலந்து கொண்டு இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தினர்.

அங்கு பாதிரியார்கள் பேசியவை வருமாறு -

இலங்கையில் ஆதிக் குடிமக்களாகிய தமிழர்கள் தொடர்ந்து கொல்லப்படுகிறார்கள். தமிழர்களாக பிறந்த ஒரே காரணத்தால் இதுவரை ஒரு லட்சம் தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர்.

இலங்கை அரசின் மனிதநேயமற்ற இந்தப் போக்கைக் கண்டிக்கிறோம். அனைத்து அடிப்படை வசதிகளும் மறுக்கப்படுகின்றன.

பாதுகாப்பு வலயத்திற்குள் தமிழர்கள் கொன்று குவிக்கப்படுகிறார்கள். அதற்காக குரல் கொடுக்கும் பத்திரிகையாளர்கள், மனித உரிமையாளர்கள் வானில் கடத்தப்படுவது அன்றாட நிகழ்ச்சியாகவுள்ளது.

ஈழத்தமிழர்களுக்கு குடியிருப்பு இல்லை, குடிநீர் இல்லை, கழிப்பிட வசதி இல்லை, உணவு இல்லை, மருந்து இல்லை என்ற நிலை நிலவுகிறது. இது ஜனநாயக உரிமையை மீறிய செயலாகும். இதைக் கடுமையாகக் கண்டிக்கிறோம். உடனடியாக அங்கு போர் நிறுத்தம் செய்யவேண்டும். தமிழர்களின் உயிருக்கு உத்தரவாதம் கொடுக்கப்பட்டு எல்லா உரிமைகளும் தமிழர்களுக்கு கிடைக்கவேண்டும் - என்றனர்.

உடனடியாக இலங்கையில் போரை நிறுத்தக்கோரி சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் அதிகாரியைச் சந்தித்து பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள் மனுக் கொடுக்க நினைத்தனர். ஆனால் அதற்கு அனுமதி கிடைக்கவில்லை. எனவே இங்கிலாந்து தூதரகம், அமெரிக்க தூதரகம் ஆகியவற்றில் கோரிக்கை மனுக்களை கொடுத்தனர்.

உண்ணாவிரதத்தை இலங்கைத் தமிழர் பாதுகாப்புப் பேரவை ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் முடித்து வைத்தார்.

### விநாயகனே வினை தீர்ப்பவனே



தெற்கு பெங்களூர் மக்களவை தொகுதியில் போட்டியிடும் பா.ஜ.க. வேட்பாளர் அனந்தகுமார் பெங்களூரில் பிரசாரம் செய்தார். அப்போது, விநாயகர் முகமூடி அணிந்து தொண்டர் ஒருவர் பிரசாரத்தில் ஈடுபட்ட போது.........

# ஈழப் பிரச்சினையில் காங்கிரஸ் அரசைத் தாக்கி பேசியதற்கு வருத்தம் தெரிவித்தாராம் திருமா

## மாநிலத் தலைவர் தங்கபாலு பேட்டி

சென்னை, ஏப். 04

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவனுக்கும் காங்கிரஸாருக்கும் இடையே சமரசம் ஏற்பட்டு விட்டது. காங்கிரஸ் கட்சி குறித்தும் மத்திய அரசு குறித்தும் இலங்கைப் பிரச்சினை தொடர்பாகத் தாக்கிப் பேசியதற்காக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தனிப்பட்ட முறையில் வருத்தம் தெரிவித்தார் - என்று மாநிலக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் சென்னையில் நேற்றுமுன்தினம் பேட்டியளிக்கையிலேயே இதைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -



இதுவரை நடந்தவற்றுக்காக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் தனிப்பட்ட முறையில் வருத்தம் தெரிவித்தார். அதை ஏற்றுக் கொண்டு இருக்கிறோம். அந்தக் கட்சி எங்களுடன் கூட்டணியில் உள்ளது. எனவே, அதை உதாசீனப்படுத்தக் கூடாது. திருமாவளவனை ஏற்றுக் கொண்டுள்ளோம்.

தேர்தலில் போட்டியிட விருப்ப மனுக்களை வெள்ளிக்கிழமை (நேற்று) வரை அளிக்கலாம். அதன்பின்னர், கட்சித் தலைமை அமைத்துள்ள ஐவர் குழு கூடிப் பேசி முடிவெடுக்கும். தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்து, ஏற்கனவே பலரும் விருப்ப மனு அளித்துள்ளனர்.

கன்னியாகுமரி தொகுதி பிரச்சினை குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். கூட்டணியில் இருதரப்பினரும் முடிவுகளை எடுத்து அறிவிக்கிறோம். அதில், மாற்றங்கள் ஏற்படுவது இயற்கை. எங்கள் அணியில், கட்சிகளுக்குள் தொகுதிகளைப் பிரித்துக் கொண்டுள்ளோம். ஆனால், பிற அணியில் தொகுதிகளைப் பிரிப்பதில் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. எங்கள் கூட்டணி பலமானது; வலிமையானது. வெற்றிக் கூட்டணியாக இருக்கும். கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் இணைந்தும், விட்டுக் கொடுத்தும் செயற்பட வேண்டும் - என்றார்.

# தேர்தலைச் சீர்குலைக்க தீவிரவாதிகள் சதி; விமானங்களைக் கடத்தி தாக்கத் திட்டமாம்

புதுடில்லி, ஏப். 04

மக்களவைத் தேர்தலைச் சீர்குலைப்பதற்காக விமானங்களைக் கடத்தி தாக்குதல் நடத்தவும், டில்லியில் பல்வேறு இடங்களில் தொடர் குண்டுவெடிப்புகளை நடத்தவும் தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மக்களவைத் தேர்தல் வரும் 16ஆம் திகதி தொடங்கி மே 13 வரை 5 கட்டங்களாக நடைபெறுகிறது. இந்தத் தேர்தலைச் சீர்குலைக்க பாகிஸ்தானைச் சேர்ந்த லஸ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டியுள்ளனர். இதற்காக இந்த இயக்கத்தைச் சேர்ந்த 20 மனித வெடிகுண்டுகள் இந்தியாவுக்குள் ஊடுருவி இருக்கின்றன என மகாராஷ்டிரா பொலிஸுக்கு 6 நாள்களுக்கு முன்பு தகவல் கிடைத்துள்ளது.

இந்த மனித வெடிகுண்டுகளில் 8 பேர் விமானம் ஓட்டும் பயிற்சி பெற்றவர்கள். மற்றவர்கள் பெண்கள்.

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரம் மீது தாக்குதல் நடத்தியது போல், இந்தியாவில் விமானங்களை கடத்தி முக்கிய கட்டடங்கள் மீது மோதி தாக்குதல் நடத்த இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதுதவிர, வங்கதேசத்தில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவவும் லஸ்கர் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதுகுறித்து மத்திய உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது. அதன்படி, வங்கதேசத்தில் உள்ள பரிசால் என்ற இடத்தில் காத்திருக்கும் 18 தீவிரவாதிகள் ஏப்ரல் முதல் வாரத்தில் ஊடுருவி மேற்கு வங்கத்தில் உள்ள கல்யாணி என்ற சிறிய நகரத்துக்குள் நுழைய திட்டமிட்டுள்ளனர். அங்கு இவர்களுக்கு உதவுவதற்காக ஹூஜி தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த திமன் என்பவர் அமர்த்தப்பட்டுள்ளார். இதற்காக அவருக்கு ரூ. 3 லட்சம் முற்பணம் கொடுக்கப்பட்டுள்ளது என உளவுத்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

மக்களவைத் தேர்தல் அமைதியாக நடைபெற எல்லா விதமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இப்போது உளவுத்துறை வெளியிட்டுள்ள இந்தத் தகவலைத் தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடு மேலும் தீவிரப்படுத்தப்படுகிறது. எல்லைகளில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, நாடு முழுவதும் விமான நிலையங்களில் உச்சக்கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# இலங்கைக் கடற்படையால் 23 தமிழக மீனவர்கள் கைது

இராமேஸ்வரம், ஏப். 04

தனுஷ்கோடி அருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 23 பேர், 6 படகுகளுடன் இலங்கைக் கடற்படையால் பிடித்துச் செல்லப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த புதன்கிழமை 698 விசைப்படகுகளில், மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச்சென்றனர். 6 படகுகளைத் தவிர மற்றப் படகுகளில் சென்ற மீனவர்கள் நேற்றுமுன்தினம் காலை கரை திரும்பினர். அந்த 6 படகுகளையும் தேடி மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். ஆனால், எங்கும் படகுகள் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், 6 படகுகளையும், அதிலிருந்த 23 மீனவர்களையும் இலங்கைக் கடற்படை பிடித்துச்சென்றுள்ளது என இராமேஸ்வரம் மீனவர்களுக்குத் தகவல் வந்தது.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 5 படகுகள் மற்றும் பாம்பனைச் சேர்ந்த எமர்சன் என்பவரது மற்றொரு படகிலும் மீனவர்கள் நாகேஷ்வரன், கதிரேசன், முருகன், மெரிஸ்டன், எட்வர்டு, வெள்ளைச்சாமி உட்பட 23 பேர் தனுஷ்கோடிக்கும், தலைமன்னாருக்கும் இடையே தேசிய கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் அவர்களைப் பிடித்துச் சென்று, மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்துள்ளனர் எனவும், படகுகள் தலைமன்னாரில் நிறுத்தப்பட்டுள்ளன எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதுகுறித்து மீனவர் ஓரமன் கூறுகையில் -

இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைப் பிடித்துச்செல்வது தொடர்கதையாகி வருகிறது. வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர் 45 நாள்கள், மீன்கள் இனப்பெருக்கத்திற்காக, மீன்பிடிக்க தடை வரை இருக்கும் நிலையில் எஞ்சியுள்ள 10 நாள்களில் மீன்பிடித்து காசு சேர்க்க வேண்டும். மத்திய, மாநில அரசுகள் தலையிட்டு மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

# போராட்டம் தொடரும்

## மீனவர் சங்கங்கள் அறிவிப்பு


இலங்கைக் கடற்படையால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 23 மீனவர்களை விடுவிக்கும் வரை போராட்டம் தொடரும் - என்று இராமேஸ்வரம் மீனவர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மாரியப்பன், கருணாமூர்த்தி, உட்பட 23 மீனவர்கள் நேற்றுமுன்தினம் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது இலங்கைக் கடற்படை அவர்களைக் கைது செய்து சிறைவைத்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மீன்துறை அதிகாரிகள் இலங்கைத் தூதரகத்தைத் தொடர்பு கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் இராமேஸ்வர மீனவர்கள் 23 பேரையும் இலங்கைக் கடற்படை விடுவிக்கும் வரை போராட்டம் தொடரும் என்று இராமேஸ்வரத்தில் நேற்று நடந்த மீனவர் சங்கங்களின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

# எனக்கும் ஓர் சந்தர்ப்பம் தாருங்கள் கெஞ்சிக் கேட்கின்றார் விஜயகாந்த்



பேராவூரணி, ஏப். 04

தி.மு.கவுக்கும், அ.தி.மு.கவுக்கும் மாறி, மாறி வாக்களிப்பதைவிட்டு எனக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள் - என்று தே.மு. தி.க. தலைவர் விஜயகாந்த் கேட்டுக் கொண்டுள்ளார்.

தஞ்சை மக்களவைத் தொகுதி தே.மு. தி.க. வேட்பாளர் ப.ராமநாதனுக்கு வாக்குகள் கோரி, பேராவூரணி - ஆவணம் வீதியில் பிரசாரம் செய்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தி.மு.க., அ.தி.மு.க. இரண்டு கட்சிகளும் மக்களின் மேல் நம்பிக்கை வைக்காமல் கூட்டணியின் மேல் நம்பிக்கை வைத்து தேர்தலைச் சந்திக்கின்றன. இந்த இரு கட்சிகளுமே ஊழலில் ஊறித் திளைத்தவர்கள். அவர்களுக்கு திரும்பத் திரும்ப வாக்களிப்பதைவிட்டு எனக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்.

ஒரு கட்சியை ஆரம்பித்து நடத்துவது என்பது எவ்வளவு கஷ்டமானது என்று எனக்குத்தான் தெரியும். கருணாநிதி, அண்ணா ஆரம்பித்த கட்சியையும், ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். ஆரம்பித்த கட்சியையும் வழிநடத்துகிறார்கள்.

பிரசாரம் ஆரம்பித்த நாள் முதல் நான் கூறி வரும் குற்றச்சாட்டுகளுக்கு, முதல்வர் பதில் கூறவில்லை. அப்படியென்றால், மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி என்பதைப் போல என்னுடைய குற்றச்சாட்டுகளை முதல்வர் ஒப்புக் கொள்கிறார் என்று தான் அர்த்தம்.

40 தொகுதிகளையும் என்னிடம் கொடுத்துப் பாருங்கள். தமிழகத்தை புதிதாக மாற்றிக் காட்டுகிறேன். என்னை யாரும் விலைக்கு வாங்க முடியாது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலானந்தர் அழகியல் கற்கை நிறுவகத்தின் அழகியல் கற்கை நெறிப் பரீட்சைத் திகதி நீடிப்பு

## யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான சாத்தியம் இல்லை என்கிறார் துணை வேந்தர்

யாழ்ப்பாணம், ஏப். 4

கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்தர் அழகியல் கற்கை நிறுவக அனுமதிக்கான பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பரீட்சைத் திகதியை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நீடித்துள்ளோம்.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி எஸ். பத்மநாதன் மேற்கண்ட வாறு நேற்றிரவு 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் மட்டக்களப்புக்குச் சென்று பரீட்சைக்குத் தோற்றுவதில் உள்ள இடர்பாடுகள் தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அனுமதிப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு பல தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விபுலானந்தர் அழகியல் கற்கை நிறுவகத்தில் போதிய அளவு ஆளணியினர் இல்லை. இதன் காரணமாக யாழ்ப்பாணத்துக்கு விரிவுரையாளரை அனுப்பி அங்கு பரீட்சை நடத்துவதற்கான சாத்தியம் இல்லை.

அதன் காரணமாக பரீட்சைத் திகதியை பிற்போட்டுள்ளோம். எதிர்வரும் 14 ஆம் திகதி வரை பரீட்சார்த்திகள் மட்டக்களப்புக்கு வந்து பரீட்சைக்குத் தோற்றலாம்.

விரைவாக பயணத்தை மேற்கொண்டு பரீட்சைக்கு தோற்ற மாணவர்கள் முன்வர வேண்டும் - என்றார் அவர். (அ-1)

# போலி நாணயங்களை அச்சிட்ட இருவர் பாணந்துறையில் கைது

கொழும்பு, ஏப். 4

பாணந்துறை அழுபோமுல்ல பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என பாணந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

# அரசியல்வாதிகளாக மாறுவதற்கு பொலிஸ் அதிகாரிகள் சிலர் முயற்சி

## அதனாலேயே அரசுக்கு வக்காலத்து என ஐ.தே.க. சீற்றம்

கொழும்பு, ஏப். 4

பொலிஸார் சிலர் தமது பதவிக் காலம் முடிந்ததும் அரசியல்வாதிகளாக மாறுவதற்கு முயற்சி செய்து வருகின்றனர் என்றும் அதற்கான ஏற்பாடுகளை இப்போதே செய்துகொண்டு வருகின்றனர் என்றும் ஐக்கிய தேசிய கட்சி எம்.பி. பாலித ரங்க பண்டார கூறினார்.

எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரச அமைச்சர்கள் பலர் அடாவடித்தனத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கால் நடைகள் அபிவிருத்தி அமைச்சுக்குச் சொந்தமான இரண்டு வாகனங்களில் சென்ற சிலர் கொள்ளுப்பிட்டி காலி வீதியில் உள்ள ஆட்டோ சாரதியைத் தாக்கியிருக்கின்றனர்.

அதேபோல் கம்பஹாவில் இன்னொரு அமைச்சர் 10 வயது சிறுவனைக் கடத்திச் சென்று அடாவடித்தனம் புரிந்துள்ளார். அச்சிறுவனின் பெற்றோரைக் கொலை செய்யப்போகிறார் என்று மிரட்டியுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸ் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அரச ஊடகப் பேச்சாளராகச் செயற்படுகிறார்.

இந்த மாதிரியான அடாவடித்தனத்தை எதிர்க்கட்சியினர் செய்திருந்தால் நிலைமை வேறாக அமைந்திருக்கும். அதனால் அரசில் உள்ளவர்கள் செய்தமைக்காக பொலிஸார் அமைதியாகவுள்ளனர்.

பொலிஸார் சிலர் பதவிக்காலம் முடிந்ததும் அவர்களுடைய கொடுப்பனவுகள் அனைத்தையும் பெற்றுக் கொண்டு அரசியலில் ஈடுபட முயற்சி செய்து வருகின்றனர் - என்றார். (அ-சி)

# போதைப்பொருளுடன் பெண் ஆமர் வீதியில் கைது

சுமார் 60 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவர் கொட்டாஞ்சேனைப் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆமர் வீதி, பரடேஸ்பிளேஸ் பகுதியில் வைத்தே ஒரு கிலோ 20 கிராம் நிறையுடைய ஹெரோயின் ரக போதைப்பொருளுடன் இந்தப் பெண் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஷெல், ஹெலி தாக்குதல்களில் 28 பேர் மரணம்; 41 பேர் காயம்

கொழும்பு, ஏப். 4

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான மாத்தளன், வலைஞர்மடம், அம்பலவன் பொக்கணை ஆகிய இடங்கள் மீது நேற்று படையினர் மேற்கொண்ட ஷெல் மற்றும் ஹெலி தாக்குதல்களில் 28 பேர் கொல்லப்பட்டனர்; 41 பேர் காயமடைந்தனர் என இணையத்தளங்கள் தெரிவித்துள்ளன.

இணையத்தளங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வன்னியில் படையினர் நேற்று நடத்திய ஷெல், தொலைதூர துப்பாக்கிச் சூடு மற்றும் எம்ஐ-24 ரக ஹெலி தாக்குதல்களில் 28 பேர் படுகொலை செய்யப்பட் டுள்ளதுடன் 41 பேர் காயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

பாஸ்கரன் விஜயகுமாரி (வயது 36), சிறீவேல்முருகன் நாகேஸ்வரன் (வயது 28), மனோகரன் இந்துமதி (வயது 27), முருகையா நகுலேஸ்வரி (வயது 22), ஐயம்பிள்ளை கோபாலசிங்கம் (வயது 55), சுப்பையா மயில்வாகனம் (வயது 67), வீரசிங்கம் விசிதா (வயது 10), தியாகு (வயது 40), விஜயரத்தினம் கிருஸ்ணவேணி (வயது 55), கந்தையாவேலும்மயிலும் (வயது 45), செல்லையா சின்னையா (வயது58), நாகலிங்கம் நவரட்ணலிங்கம் (வயது 32), பாலு இரத்தினசிங்கம் (வயது 61), சுந்தரம் குகநிசா (வயது 05), திலகராஜா சசிகரன் (வயது 23), சின்னத்துரை ரவீந்திரன் (வயது 41), அப்பன் (வயது 30), மா.சந்திராதேவி (வயது 14), சந்திரகுமார் வதனி (வயது 15), சந்திரகுமார் சந்தியா (வயது 13), மயூரதன் கம்சனா (வயது 12), அருட்செல்வம் சசீலன் (வயது 25), கந்தையா ராசன் (வயது 77), தம்பிப்பிள்ளை தவராசா (வயது 32), சந்தியாப்பிள்ளை கேசவன் (வயது 44), சாந்தலிங்கம் காந்தமலர் (வயது 16), யோகேஸ்வரன் சாதனா (வயது 45) ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஒருவரின் பெயர் விவரம் கிடைக்கப் பெறவில்லை - என்றுள்ளது. (1)

# இந்த வருடத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார வளர்ச்சி 5 வீதத்திற்கும் குறைவாக இருக்கும் என்பது எமது எதிர்பார்ப்பு. சர்வதேச நிதி நெருக்கடியின் தாக்க மும், மத்திய வங்கி பின்பற்றிய இறுக்கமான நாணயக் கொள்கையுமே இதற்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கி எதிர்வு கூறும் பொருளாதார வளர்ச்சி வீதம் கடந்த ஏழு வருட காலப் பகுதியில் இலங்கையின் பொருளாதாரத் தில் காணப்பட்ட மிகக் குறைந்தளவு பொருளாதார வளர்ச்சி வீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

2008 இன் கடைசி காலாண்டு பொருளாதார வளர்ச்சி 6 வீதமாக காணப்பட்டது.

இதேவேளை, இவ்வருடம் மே, ஜூன் மாதப் பகுதிகளில் பணவீக்கம் முற்றாக குறைவடைந்துவிடும் என்றும் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜூன் மாதம் 28 வீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் இவ்வருடம் மார்ச் மாதம் 5.3 வீதமாகக் குறை வடைந்துள்ளது.

இதேவேளை, சமீபத்தில் இடம்பெற்ற பேச்சுகளின்போது, சர்வதேச நாணய நிதியம் நெகிழ்ச்சித் தன்மையை வெளிப்படுத்தியதாகவும், ஏற்கனவே நடைமுறையிலுள்ள அரச நிறுவனங்கள் சிலவற்றின் சீர்திருத்தம் மற்றும் அடிப்படை பொருளாதார விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கடன் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

# பாதுகாப்புச் சபையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் நடைபெறும் பகுதிகளில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் சிக்கியுள்ளனர் என ஐக்கிய நாடுகள்சபை மதிப்பிடுகின்ற போதிலும், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஏப்ரல் மாதத்திற்கான நிகழ்ச்சி நிரலில் எதற்காக இலங்கை விவகாரம் உத்தியோக பூர்வமாக இடம்பெறவில்லையென்ற கேள்விக்குப் பதிலளித்துள்ள பாதுகாப்புச் சபையின் புதிய தலைவர், ''இலங்கை தொடர்பாக பாதுகாப்புச் சபையில் பல்வேறு அபிப்பிராயங்கள் உள்ளன. பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரம் இடம்பெற்றிருக்கவில்லை என சில நாடுகள் சொல்கின்றன. நாங்கள் இலங்கை விடயம் குறித்து ஆராய்வது முக்கியமானது எனக் கருதுகிறோம்'' என்று தெரிவித்தார்.

பாதுகாப்புச் சபை உத்தியோகப்பற்றற்ற விதத்தில் மூடிய கதவுகளுக்குள் - இரு தடவைகள் இலங்கை குறித்து ஆராய்ந்ததை மிகவும் பெறுமதி வாய்ந்த விடயம் என அவர் வர்ணித்துள்ளார். இதேபோன்று மீண்டும் இடம்பெறாது தாம் தவிர்க்க உள்ளதாக ஹெலர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மேற்கொண்ட முன்முயற்சியையும், ஐ.நா.வின் முக்கிய அதிகாரிகளின் விஜ யத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

எனினும், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் தொலைபேசி அழைப்பிற்குப் பின்னர், ''நாங்கள் எந்த விதமான சர்வதேச உள்நாட்டு அழுத்தங்களுக்கும் அடிப்பணிய மாட்டோம்'' என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை குறித்து கருத்துகளை வெளியிட மெக்ஸிக்கோ தூதர் மறுத்து விட்டார்.

**பாதுகாப்புச் சபைக் கூட்டம் அவசியம்**

பாதுகாப்புச்சபையின் தலைவர் என்ற வகையில் எவ்வாறு செயற்படப் போகிறீர்கள் என்று 'இன்னர் சிற்றி பிறெஸின்' சார்பில் கேட்கப்பட்டதற்குப் பதிலளித்த மெக்ஸிகோவின் தூதர், ஏனைய விடயங்களுடன் பாதுகாப்புச் சபையின் கூட்டமொன்று அவசியமென்றும் இலங்கையும், மியன்மாரும் அதில் ஆராயப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

''இலங்கையின் மனித உரிமை விடயங்கள் பாதுகாப்புச் சபையில் இடம்பெறக் கூடாது. ஐக்கிய நாடுகளின் வேறு அமைப்புகளில் இவை இடம்பெற வேண்டுமென சில நாடுகள் விரும்புகின்றன'' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரம் பாதுகாப்புச் சபையில் இடம்பெறுவதை கடுமையாக எதிர்த்த லிபியாவிடமிருந்து - இலங்கை நிலைமை குறித்து ஆராயப்பட வேண்டுமென முதலில் வேண்டுகோள் விடுத்த மெக்ஸிக்கோவிடம் - பாதுகாப்புச் சபையின் தலைமைப் பொறுப்பு சென்றுள்ளதால் பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரம் மீண்டும் ஆராயப்படுவது தவிர்க்க முடியாதது என்றும் இன்னர் சிற்றி பிறெஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. (அ-சி)

# மரண அறிவித்தல்

## திருமதி தம்புராமலிங்கம் தங்கச்சிப்பிள்ளை

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்புராமலிங்கம் தங்கச்சிப்பிள்ளை நேற்று (03.04.2009) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்புராமலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும் நாகபூசணி, சிவபாதம், விமலாதேவி, சுசிலாதேவி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆறுமுகம்,விஜயேந்திரன், விஷ்ணுநாதன், ராஜராஜேஸ்வரி, கலாவதி ஆகியோரின் மாமியும் சண்முக இராகவன், சுகித்திரா, சிவானந்தராசா, கலைவாணி, தாஸன், சயந்தன், ஜனகன், வசந்தன், பார்த்தீபன், கரிதாஸ், சுவிஸ்கரன், சுவேந்தினி, காயத்திரி, சிவசங்கர், கார்த்திகா, சிந்துயா ஆகியோரின் பேர்த்தியும் கோபி, றோசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (03.04.2009) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
161, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
சி.ஆறுமுகம்

# தவறிவிட்டது

கடந்த ஞாயிற்றுக்கிழமை 29.03.2009 அன்று இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவில் ஆலய வெளி வீதியில் கே. மகேந்திரராஜா என்பவரது மோட்டார் சைக்கிள் காப்புறுதி, நடப்பாண்டு வரி, சாரதி அனுமதிப்பத்திரம் ஆகிய முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்புநிறப் பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிவகாமி அம்மன் கோவில் ஆதீன கர்த்தா விடமோ அல்லது கே.மகேந்திரராஜா, சுதுமலை வடக்கு, அம்மன் கோயிலடி, மானிப்பாய் என்னும் முகவரியுடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

# மரண அறிவித்தல்

## நடராசா முத்துக்குமாரசுவாமி

சிறுப்பிட்டி தெற்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா முத்துக்குமாரசுவாமி நேற்று (03.04.2009) வெள்ளிக்கிழமை சிவபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - சோதிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற கைலாசபிள்ளை - மங்கையர்க்கரசி தம்பதியினரின் அன்பு மருமகனும் நடேஸ்வரியின் அன்புக் கணவரும் விக்னேஸ், முருகதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சத்தியலோகநாயகியின் அன்புச் சகோதரனும் மயில்வாகனம், மகேசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2009) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2மணியளவில் குடும்பமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடிப்படை - புலிகள் பாணமை காட்டில் மோதல்

கொழும்பு,ஏப்ரல் 04

அம்பாறை,பாணம,லகுகல காட்டுப் பகுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் அணியொன்றுக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் மோதல் இடம் பெற்றுள்ளது என படைத்தரப்புத் தெரிவிக்கின்றது.

அப்பகுதியில் நேற்று விசேட அதிரடிப் படையினர் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்ட சமயமே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

இம் மோதலின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது உயிரிழந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர் 13 பேரின் சடலங்களை பொலிஸார் மீட்டனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது. எனினும் தமது தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் குறித்து படையினர் எந்தத் தகவல்களையும் வெளியிடவில்லை.

இந்த மோதல் இடம்பெற்ற லகுகல 10 ஆவது மைல்கல் பகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - இத்தாக்குதலில் 13 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 19 பேர் படுகாயமடைந்துள்ளதாக புலிகளின் அரசியல் துறையை மேற்கோள்காட்டி சில. இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-சி-06)

## 'சிரச'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலையொன்று தொடர்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றுக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற சமயமே இவர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என சிரச தொலைக்காட்சியின் செய்திப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## புதுமாத்தளனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாளர் சரஜி விஜயரட்ண தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சைக்காக புல்மோட்டைதள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இவர்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் 17 ஆவது தொகுதியினராக அழைத்துச்செல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-06)

## ஹோம்ஸ் - ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டோர் ஹட்ரம்மை தமது அமைச்சுக்கு அழைத்து, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹொன இலங்கையின் அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்.

வெளிநாடொன்றில் தங்கியிருக்கும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதியான கே.பி. எனப்படும் செல்வராஜா பத்மநாதன் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் ஆகியோருக்கு இடையில் நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தொலைபேசி உரையாடல் குறித்து ஊடகங்களில் வெளியான அறிக்கைகள் குறித்தே நோர்வேயின் தூதுவரிடம் இலங்கை வெளிநாட்டமைச்சு தனது அதிருப்தியினை வெளியிட்டிருப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கொஹொன தெரிவித்தார்.

இவ்வாறானதொரு கலந்துரையாடலுக்கு அனுசரணை வழங்கியதாக நோர் வேயின் தூதுவர் டோர் ஹட்ரம் இந்தச் சந்திப்பின் போது ஒப்புக்கொண்டிருப்பதாக பாலித கொஹொன தெரிவித்திருக்கிறார். (அ-1-6)

# நோர்வேயிலுள்ள ரஷ்ய நாட்டு தூதரகத்தின் முன் கவனயீர்ப்பு

கொழும்பு, ஏப். 04

தமிழ் மக்கள் மீது மோசமான இன அழிப்பு நடைபெறுகின்றமையைக் கருத்தில் கொண்டு இலங்கை அரசுக்கும் அதன் படைத்துறைக்கும் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கும் ரஷ்ய அரசு வழங்கி வரும் உதவிகளை நிறுத்த வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்து நோர்வேயில் உள்ள ரஷ்யத் தூதரகத்தின் முன்பாக நேற்றுமுன்தினம் தமிழ் மக்களின் கவனயீர்ப்பு ஒன்றுகூடல் நடைபெற்றது.

நோர்வே தமிழ்ச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கவனயீர்ப்பு ஒன்றுகூடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியில் இருந்து 3 மணி வரை நடைபெற்றது.

கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள், தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிராக வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தாதே, இன அழிப்பு அரசுக்கு ஆயுத உதவிகளை வழங்காதே, தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையை அங்கீகரி போன்ற கொட்டொலிகளை எழுப்பியதோடு பதாகைகளைத் தாங்கி நின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## கருணாநிதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம் கோபாலபுரத்தில் உள்ள அவரது வீட்டுக்கு கிடைத்துள்ளது என்று மேலும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் கொலை அச்சுறுத்தலை அடுத்து கருணாநிதிக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படவிருக்கிறது என்று பொலிஸார் கூறினர்.

விடுதலைப் புலிகளால் ஏற்கனவே கருணாநிதிக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சு கருணாநிதிக்கு முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்ததாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-1)

## உடனடியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருத்தி அமைச்சர் மைக் போஸ்டர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் மனிதாபிமான அடிப்படையிலான போர் நிறுத்தம் உடனடியாக ஏற்படுத்தப்படவேண்டும். வன்னிப் பகுதியில் உள்ள மக்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படவேண்டும். அவ்வாறு இல்லையானால் நாளாந்தம் நாம் ஒரு மனித அனர்த்தத்தை நோக்கியே செல்ல வேண்டியிருக்கும் - என்றும் அவர் சொன்னார்.

வன்னிப் பிராந்தியத்தில் தொடரும் போரால் நாளாந்தம் நூறு பேர் வரையில் கொல்லப்படுகின்றார்கள் அல்லது காயமடைகின்றார்கள் என நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன. பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலும் இவை இடம்பெறுகின்றன -

உடனடிப் போர் பிராந்தியத்துக்கு அனுப்பி வைக்கப்படும் உணவுப் பொருள்களின் தொகை ஏற்கனவே போதுமானதாக இல்லை. அதேவேளையில் போர் சிறிய பகுதியில் நடைபெறும் போது பொதுமக்களுடைய உயிரிழப்புக்கள் தவிர்க்க முடியாததாகவே இருக்கும் - என்று அமைச்சர் மைக் போஸ்ட்டர் றொய்டர் செய்திச்சேவைக்குத் தெரிவித்திருக்கிறார். (அ-சி)

# ஐ.நா. செயலரின் பிரதிநிதி நேற்று அமைச்சர் பதியுதீனுடன் சந்திப்பு

கொழும்பு, ஏப். 04

இலங்கைக்கு உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இடம்பெயர்ந்தோருக்கான மனித உரிமை அமைப்புச் செயலாளரின் பிரதிநிதி வோல்டர் கீலின் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாட் பதியூதீனைச் சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று நண்பகல் இடம்பெற்றதாக என அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, யுத்த பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இன்று ஐக்கிய நாடுகள் சபையின் இடம்பெயர்ந்தோருக்கான மனித உரிமை அமைப்புச் செயலாளரின் பிரதிநிதி வவுனியாவிலுள்ள முகாம்களுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

முகாம்களிலுள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவர் இதன்போது ஆராயவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாடுகளின் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோரையும் வோல்டர் கீலின் சந்திக்கவுள்ளார்.

சுவிற்ஸர்லாந்து பேர்ண் பல்கலைக்கழக சட்ட பீடத்தின் யாப்பு மற்றும் சர்வதேச பொதுச் சட்டத்துறை பேராசிரியரான வோல்டர் கீலின், கடந்த 2004ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகளின் இடம்பெயர்ந்தோருக்கான மனித உரிமை அமைப்புச் செயலாளரின் பிரதிநிதியாகக் கடமையாற்றி வருகின்றார். (அ-சி)

## அபுதாபியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப் பொலிஸ் அதிகாரிகள் கைது செய்துள்ளனர் என வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பப் பயிற்சிப் பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணனிடம் உறவினர்கள் முறைப்பாடு செய்ததையடுத்து பிரதி அமைச்சரின் தலையீட்டைத் தொடர்ந்து ஆறு இளைஞர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அபுதாபியிலிருந்து, விமான நிலையத்தில் வந்திறங்கிய வல்வெட்டித்துறை சமரபாகுவை சேர்ந்த குலம் பிரதாப், எம்.ரகுபரன், துரைராஜ் ராஜ்பிரேம், ரி.ஜேகேந்திரன், அச்சுவேலி பாரதி வீதியைச் சேர்ந்த டி.மனோராஜ், கோப்பாய் மத்திய வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் காந்தரூபன் ஆகியோரே கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர். (சி)

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

58 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரவீந்திர சில்வா விடுத்துள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு சரணடையாவிடின் அவர்களை அழித்தொழிக்கும் பணிகள் தீவிரமாக இடம்பெறும் எனவும் ஆயுதங்களைக் கீழே வைத்துச் சரணடைபவர்களுக்கு உயிர்ப்பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் கட்டளைத் தளபதி தெரிவித்திருக்கிறார்.

அப் பகுதிக்குள் இருநூறுக்கும் மேற்பட்ட புலிகள் சிக்குண்டுள்ளதாகவும் இரண்டு நாள்கள் நடைபெற்ற சண்டையின் பின்னர் இடம்பெற்ற தேடுதலின் போது 100 புலிகளின் சடலங்களை கைப்பற்றியுள்ளனர். இன்னும் இரண்டு நாள்களுக்குள் இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு பிரதேசங்கள் முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும் என்றும் கட்டளைத் தளபதி கூறியதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களின் பாதுகாப்புக்காக அறிவிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தினுள் புலிகளின் விநியோக மார்க்கங்கள் தடுக்கப்பட்டு விட்டதாகவும் சரணடையாவிடின் அவர்களின் அழிவைத் தடுக்க முடியாது என யுத்த களத்தில் உள்ள மற்றொரு சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவரும் கூறியதாகவும் அரச ஊடகம் நேற்று தகவல் வெளியிட்டது. (அ-06)

## போரை நிறுத்தக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலையை தடுத்து நிறுத்த அமெரிக்கா தலையிட வேண்டும்'' இலங்கையில் போர் நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும்'' என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர். அவர்கள் படுகொலைகளை நிறுத்தக்கோரும் பதாகைகளையும் அமெரிக்கக் கொடிகளையும் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கையை வலியுறுத்தி வெளி விவகார அமைச்சு அதிகாரிகளிடம் மகஜர் ஒன்றையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர்.

வெளிவிவகார அமைச்சுக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை அடுத்து, சர்வதேச நாணய நிதியத்தின் அலுவலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இலங்கைக்கு உதவி வழங்கக் கூடாது என்று அங்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர். (அ-சி)

## புதுக்குடியிருப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் இடம்பெற்ற கடும் சண்டைகளில் 45 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் கொல்லப்பட்டவர்களின் சடலங்களையும் பெருமளவு ஆயுத தளபாடங்களையும் இராணுவத்தினர் கைப்பற்றியிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியிருக்கின்றது.

இதேவேளை, விடுதலைப்புலிகளிடம் மிஞ்சியிருந்த ஆனந்தபுரம் என்ற இடத்தை இராணுவத்தினர் கடும் சண்டைகளின் பின்னர் நேற்று கைப்பற்றியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சகம் நேற்றிரவு அறிவித்தது.

நேற்றைய சண்டைகளில் 34 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்ற போதிலும் படைத்தரப்பில் ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றிய விவரங்களை அது வெளியிடவில்லை.

இராணுவத்தினருக்கு எதிராக விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும், இராணுவத்தினருக்கு இதனால் பெரும் சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டன. (அ-1)


**புது வருட சிறப்பு விற்பனை**

புத்தம் புதிய புது வருட வாழ்த்து மடல்கள்.
(சிங்கப்பூர் - இந்திய டிசைன்கள்)

| | |
|---|---|
| லீலா கலண்டர் | - 200/=100/= |
| Management Diary | - 400/= 200/= |
| Disk Diary | - 125/= 75/= |
| புத்தாண்டுப் பலன்கள் | - 2009-10 |
| குருப்பெயர்ச்சிப் பலன்கள் | - 2009 - 10 (இந்தியா) |

**அன்னை புத்தகசாலை**
இல.07, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். T.P. 021 222 9881

**விற்பனையாகிறது**
**Speed Marketing**

| | |
|---|---|
| சுற்றாடல் - 2009- | கணிதம் -2009- |
| தமிழ் - 2009- | ஏஞ்சல் - 2009 |

ஆக்கம் - வ.சந்திரகுமார் (மட்டக்களப்பு)
முன்பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

**அன்னை புத்தகசாலை**
இல.07, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். T.P. 021 222 9881

**IBS சுண்டுக்குளி**
Gr 1- O/L வரை
புதிய அனுமதிகள்
2ம் தவணை ஆரம்பம்
6-4-2009 4pm
Gr.5 விசேட வகுப்பு
mon/tue/wed - 4pm

மிதிவெடி விழிப்புணர்வுக்கும் செயற்பாட்டிற்குமான
சர்வதேச தினம்
ஏப்ரல் - 04
சர்வோதயம்
unicef
(சி/557795)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.